Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-976)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 12 (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 284

## 'சோஷின்' கப்பல் மூழ்கடிப்பில் வீரச்சாவடைந்த போராளிகள்


லெப். கேனல் அன்புக்குமரன்


லெப். கேனல் செந்தமிழ்


லெப். கேனல் கதிர்


லெப். கேனல் கஜேந்திரன்


மேஜர் நிர்மலன்


மேஜர் கண்ணியநாடன்


மேஜர் வள்ளுவன்


மேஜர் நிமால்


மேஜர் மணியரசன்


மேஜர் வீரநாதன்


கப்டன் செழியன்


நாட்டுப்பற்றாளர் மோகன்

### ரெலவ்சன் நாளை வன்னி செல்கிறார்

(கொழும்பு)

கடல்வழிப் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் மற்றும் குரங்குப்பாஞ்சான் விவகாரம் ஆகியன தொடர்பாக, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் நாளை வன்னிக்குச் செல்லவுள்ளார்.

வன்னியில் மூன்று நாட்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க சந்திரிகாவின் பிள்ளைகள் எதிர்ப்பு!

## தமக்கு நெருங்கியவர்களிடம் அவரே தெரிவிப்பு

(கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பதை, ஜனாதிபதியின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.**

**தனது தந்தை குமாரதுங்கவின் கொலைக்குக் காரணமானவர்களுடன் கூட்டுவைக்கவேண்டாம் என, விமுக்தி - தனது தாயாரைக் கேட்டுள்ளார். இதே நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதியின் மூத்த புதல்வி யசோதரா குமாரதுங்கவும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



ஜே.வி.பியுடன் தனது கட்சி கூட்டமைப்பதை, தனது இரு பிள்ளைகளும் எதிர்ப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறிவருகிறாராம்.

இதேவேளை - பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான கூட்டுக் குறித்து நடைபெறும் பேச்சுக்கள் தொடர்பாகக் கருத்துக்கூற ஜே.வி.பி. மறுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியை, தனிப்பட்ட ரீதியில் ஜே.வி.பி. சந்திக்க விரும்பிய போது - தன்னை கட்சி என்ற வகையிலேயே ஜே.வி.பி சந்திக்கலாம் என,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் விரும்பாத கட்சிகளுடன் பேசுவதில் பயன் ஏதுமில்லை!

## தமிழ் ஊடகவியலாளரிடம் தமிழ்ச்செல்வன்

புதிய அரசு ஆட்சியமைத்து, யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டால் - அதை எதிர்கொள்ளவும் நாம் தயாராகவுள்ளோம். ஆனால், அமைதி வழியில் பிரச்சினைகளைத் தீர்க்கவே விரும்புகிறோம் என, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தம்மைச் சந்தித்த தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்தார். தமிழ் ஊடகவியலாளர்களுடனான இச்சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

சந்திரிகாவின் ஆட்சியில்தான் எமது இனம் பாரிய அழிவினைச் சந்தித்துள்ளது. அதனை நாம் மறந்துவிடவில்லை என்று குறிப்பிட்ட அவர்,

கடல் எல்லைகளை வகுக்கக்கூடியநிலை தற்போது உள்ளது. இந்த விடயங்களைக் கண்காணிப்புக்குழு அவதானிக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாத தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு சம்மதித்தால் புலிகள் தடை நீங்கும்!

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள், பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடுவதாக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்களேயானால் - பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்கமுடியும் என்று, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்திருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா வெளியிட்டுள்ள இந்த வருடத்திற்கான பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியல் தொடர்பான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'திவயின' மேலும் கூறியுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடுமாறு, விடுதலைப் புலிகளை அமெரிக்கா வலியுறுத்தி வந்தபோதிலும், அது குறித்து அவர்கள் செவிசாய்க்கவில்லை எனவும்,

உலகிலேயே அதிகளவான தற்கொலைப்படைப் போராளிகளைக் கொண்ட அமைப்பாக விடுதலைப் புலிகள் இயங்கிவருவதாகவும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரை சந்தகிரி இன்று சந்திக்கின்றார்!

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரை - கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இன்று ரெல் அவிவ் நகரில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் பாதுகாப்பு ஒத்துழைப்புக் குறித்தும் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

கடற்படைக்கு நவீன ஆயுதங்களை வழங்குவது குறித்து, தற்போது ரெல் அவிவில் தங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, சில தினங்களில் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரைச் சந்திக்கவுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சோஷின் கப்பல் மீதான தாக்குதல்

# வீரச்சாவடைந்த பன்னிருவர் விபரம் விடுதலைப் புலிகளால் அறிவிப்பு!

சர்வதேச கடலில், கடற்படையினரின் தாக்குதலில் கடந்த மாதம் 14 ஆம் திகதி வீரச்சாவடைந்த 11 கடற்புலிகள் மற்றும் நாட்டுப்பற்றாளர் ஒருவரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டனர்.

வீரசாவடைந்தவர்களில் நால்வர் லெப். கேணல் நிலையிலும், அறுவர் மேஜர் நிலையிலும், ஒருவர் கப்டன் நிலையிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீரச்சாவடைந்த கடற்புலிகளின் விபரம் வருமாறு -

- லெப். கேணல் அன்புக்குமரன் (வல்லிபுரம் சிவகுமார், வல்வெட்டித்துறை).
- லெப்.கேணல் செந்தமிழ் (சின்னராசா சிவரூபன், வெற்றிலைக்கேணி).
- லெப்.கேணல் கதிர் (செல்வரத்தினம் சசிதரன், மீசாலை தெற்கு).
- லெப்.கேணல் கஜேந்திரன் (நல்லையா கிருஷ்ணன் கபில் தினேஷ், கிளிநொச்சி).
- மேஜர் நிர்மலன் (ரணராஜா ரகுநாத், வல்வெட்டித்துறை).
- மேஜர் கண்ணியநாடன் (பொன்னம்பலம் கிருபாகரன், பளை).
- மேஜர் வள்ளுவன் (துரைரத்தினம் சைலேஸ்வரன், ஏழாலை).
- மேஜர் நிமால் (தங்கராசா செல்வகுமார், பரந்தன்).
- மேஜர் மணியரசன் (முத்துலிங்கம் லவகுமார், (முல்லைத்தீவு).
- மேஜர் வீரநாதன் (தியாகராசா தயாநிதி, மாங்குளம்).
- கப்டன் செழியன் (சொக்கலிங்கம் ஜெகன், கிளிநொச்சி).
- நாட்டுப்பற்றாளர் மோகன் (சொந்த இடம் - ஊர்காவற்துறை, தற்காலிக வதிவிடம் - முல்லைத்தீவு).

## சிறு விளம்பரம்

### சோதிடம்

கைரேகை, சாதகம் கொண்டு தீர்க்கமான பலன், பிறநாட்டுப் பயணம், காதல், நோய்நொடி, மங்கல நாள், தேர்வு, திருமணப் பொருத தங்கள், செவ்வாய் தோஷ நிவிர்த்தி விதிகளுக்கமைய பெற்றுக்கொள்ள வருக. கோளறிவாளர் செல்வநாயகம், இல.5, கோயில் வீதி (அம்பட்டப் பாலத்தடி), கொக்குவில் கிழக்கு. (414)

## தேவை

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவளித்துத் தயாரிக்கும் எமது தொழிலகத்துக்கு நிதி தேவையாகவுள்ளது. வட்டிக்குக்குப் பணம் கொடுக்கவுள்ளவுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொழிலதிபர்
சிவநேயர். இ.தவகோபால்,
525/2, கே.கே.எஸ். வீதி,
த.பெ.இல.77, யாழ்ப்பாணம். (சி-1168)


## ஒரு கோடி ரூபா நாணயங்கள் பிடிபட்டன!

வெளிநாடு ஒன்றுக்கு சட்டவிரோதமாகக் கடத்தப்படவிருந்த சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்களை, சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் இருந்து வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பப்படவிருந்த பொதியொன்றைச் சோதனையிட்டபோதே, இந்த ஒரு கோடி ரூபா பெறுமதியான உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதில், 25 லட்சம் ரூபா பெறுமதியான உள்நாட்டு நாணயங்களும் அடங்கியிருந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு நாணயத்தாள்கள் மிகவும் தந்திரமான முறையில் பொதிசெய்யப்பட்டு இருந்ததாகவும் சுங்கப் பகுதி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.


மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

## யாழ். நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும்.

*காலம்* : 2003 ஜூலை 15 முதல் 30 வரை.
*நேரம்* : தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்).
*இடம்* : யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபம்.

- ❑ பாலர் முதல் பல்கலைக்கழக மாண்வர்களுக்கான பாட, பயிற்சிப் புத்தகங்கள்.
- ❑ பல்கலைக்கழக மாணவர்களுக்கான மருத்துவ, விஞ்ஞான, கணித, பொறியியல், கலை, விஞ்ஞான, வணிக நூல்கள்.
- ❑ கணினிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்.
- ❑ சிறுவர் இலக்கியங்கள்.
- ❑ நாவல்கள், சிறுகதைகள், கவிதைத் தொகுதிகள்.
- ❑ அகராதிகள் (தமிழ், ஆங்கில மொழிகளில்).
- ❑ ஜோதிட நூல்கள்.
- ❑ சமையற்கலை நூல்கள்.
- ❑ ஆங்கில இலக்கிய நூல்கள்.
- ❑ தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்).
- ❑ தரமான C.R. புத்தகங்கள் (மலிவு விலையில்).

**விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில், ஒரே நாளில் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!**

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய, விலை விபரம்:

| | | |
|---|---|---|
| இலங்கை நூல்களுக்கு | - | ஆகக்கூடிய சில்லறை விலையில் 10 % கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு | - | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு | - | 1UK £ - 165/= வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு | - | 1US $ - 110/= வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு | - | 1S $ - 75/= வீதப்படி |

**முக்கிய குறிப்பு:**
பாடசாலைகள், பல்கலைக்கழகம், பொது நிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில், 10% கழிவு கொடுக்கப்படும். புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விசேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதிய ஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.
யாழ்.எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்க விரும்பினால்
13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

*வாருங்கள்! அலைகடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!*
*விரும்பியதை வாங்குங்கள்! அரியவாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!*
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-1169)

**வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்**
**JEYA BOOK CENTRE, 91-99, People's Park Complex, Colombo - 11**

மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!


## சின்னஞ்சிறு செய்திகள்

### கலைஞர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த கலைஞர்கள், படைப்பாளிகள், பாடகர் குழுக்கள், இசைக் கச்சேரிக் குழுக்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்த அனைவரையும், இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கும் முக்கிய கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இக்கலந்துரையாடல். கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெறும். (61)

### மெதடிஸ்த பாடசாலைக்கு வலைப்பந்தாட்ட சீருடை அன்பளிப்பு!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வலைப்பந்தாட்ட அணிக்கு, பாடசாலையின் - கனடா பழைய மாணவர் சங்கம், புதிய விளையாட்டுச் சீருடைகளை வழங்கியுள்ளது.

கல்வி, விளையாட்டு புலமைப் பரிசில் பெற்று கனடா சென்றிருந்த அப்பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசனிடம்- கனடா, பாடசாலை பழைய மாணவர் சங்கம் இந்தச் சீருடைத் தொகுதியினைக் கையளித்துள்ளது. (17)

### அம்புலன்ஸ் சேவை இல்லாததால் நோயாளர் அவதி

பளை அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இருந்தும், சாரதி இல்லாமையால், நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒரு மாதகாலமாக - அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடாமல் உள்ளது. இதன்காரணமாக, பளைப் பகுதி நோயாளர்கள் - மேலதிக சிகிச்சைக்காக அதிகளவு பணம் செலுத்தியே பல்வேறு சிரமங்களின் மத்தியில் - சாவகச்சேரி வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் சென்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(122)

### பேச்சுப்போட்டி நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு, யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில், கடந்த 28 ஆம் திகதி நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட பேச்சுப் போட்டிகள், நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு, யாழ்.மாநகர சபையின் உள்ளூராட்சி வார கொண்டாட்ட செயலணிக் குழுவின் செயலாளர் இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார்.


## மாபெரும் புத்தகம் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

புத்தகம் புத்தகம்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள **புத்தகக் கடல்.** 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள். ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம். இவைதவிர எம்மிடம் பாடசாலை, அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழி பொருட்கள், மூலப் பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைக்களுக்கு இலவச விநியோகசேவை. உங்கள் தேவை எதுவானாலும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
(சி-1148) **212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2225542**

# சர்வதேச மட்டத்தில் புலிகள் நிதி திரட்டுவதில் தவறில்லை!

## நோர்வே உள்துறை அமைச்சர் எர்ணா சொல்பேர்க்



(ஒஸ்லோ)

சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகள் நிதி திரட்டுவதில் எந்தத் தவறும் இல்லை என்று, நோர்வேயின் உள்துறை மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எர்ணா சொல்பேர்க் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நோர்வேயின் குடிவரவுக் கொள்கை - யு.என்.எச்.சி.ஆரின் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடைய அகதிகள், நோர்வே நாட்டுக்குள் உள்நுழைவதற்கு அனுமதிக்கின்றது. அதைவிட, நோர்வேயில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள், தமது குடும்பத்தினரை அழைத்துக்கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

கடந்தவருடம் 20 ஆயிரம் பேருக்கு நிரந்தர வதிவிட அனுமதி நோர்வேயில் வழங்கப்பட்டது. இவர்களைவிட தொழில்சார்ந்த அடிப்படையிலும் அனுமதி வழங்கப்படுகிறது.

குடிவரவாளர்களால் நோர்வேயில் குற்றங்கள் இழைக்கப்படுவதற்கு, குடிவரவுக் கொள்கையில் உள்ள தவறு காரணமல்ல. கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து போலியான காரணங்களைக்காட்டி, நோர்வேக்குள் நுழைந்தவர்களே குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர்.

ரஷ்யா, ருமேனியா போன்ற நாட்டவர்கள் குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்களை நோர்வேயில் தங்க அனுமதிப்பதில்லை. இந்த நாட்டவர்களுக்குச் சிறியளவிலான அனுமதியே வழங்கப்படுகிறது. 48 மணிநேரத்துக்குள் தஞ்சம் வழங்கும் திட்டத்தை இதனாலேயே அமுல்செய்துள்ளோம்.

இலங்கையில் - தமிழ் மக்கள் மீதான யுத்தத்தினால்தான், அதிகளவான தமிழ்மக்களுக்கு - நோர்வேயில் புகலிடம் அளிக்கப்பட்டது. இந்த யுத்தத்தால் சிங்களவர்கள் பாதிக்கப்படவில்லை என்பதால், சிங்களவருக்குக் குறைவாகவே புகலிடம் வழங்கப்பட்டது.

இலங்கை அமைதி முயற்சியில் நோர்வேக்கு முக்கிய பங்கு இருக்கிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நெல்லியடியில் விபத்து நான்கு பேர் காயம்

பருத்தித்துறையிலிருந்து பிரயாணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்று, கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

நெல்லியடிச் சந்திக்கருகாமையில் மின்கம்பமொன்றுடன் மினிபஸ் மோதிய இந்த விபத்தில், 4 பேர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த விபத்தில் - கரவெட்டி வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த எஸ்.புஸ்பராசா (வயது 23), நவிண்டில், கரவெட்டியைச் சேர்ந்த ஆர்.ரதீஸ்கரன் (வயது 34) ஆகிய இருவரும் காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், பலத்த காயமடைந்தவர்களான கரவெட்டியைச் சேர்ந்த- என்.சரஸ்வதி (வயது 70), ஆத்தியடி, பருத்தித்துறையைச் சேர்ந்த பி.ராஜேஸ்வரி (வயது 59) ஆகிய இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையிலிருந்து, மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸவண்டி மூலம், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

# பெற்றோலிய ஆய்வுப் பணிகளில் இந்தியாவுக்கே முன்னுரிமை வேண்டும்!

## தினேஷ் குணவர்த்தன எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோலிய ஆய்வுக்கு உதவும் பொருட்டு, நோர்வே- இலங்கைக் கடற்பிராந்தியத்தை ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெற்றோலிய வளங்கள் சட்டமூலம் மீதான விவாதத்தில் பேசிய அவர் - பெற்றோலிய ஆய்வுப்பணிகளில் இந்தியாவுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் பெற்றோலிய ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளபோதிலும், நோர்வே மறைமுக நோக்கத்துடன் இந்தப் பணியில் தலையிட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேசிய அரசாங்கம் அவசியம்!

## பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும், நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாக்கவும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்த தேசிய அரசு ஒன்று உருவாக்கப்படவேண்டும். இவ்வாறு முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்கவின் தலைமையில், ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து, இத்தகைய ஒரு தேசிய அரசை உருவாக்குவதில் இரகசியமாக உழைத்து வருவது பற்றி வெளியான செய்தி தொடர்பாகக் கருத்துக்கூறும்போது, இத்தகைய ஒரு முயற்சியில் பகிரங்கமாக இறங்கியதற்காகவே தன்னை சந்திரிகா அரசு பதவிநீக்கம் செய்ததாக பௌசி மேலும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யும், சுதந்திரக் கட்சியும் இணைந்துகொள்ளும் முயற்சிகள் தற்போது மும்முரமாக இடம்பெற்றுவரும் இவ்வேளையிலேயே, இத்தகைய ஒரு தேசிய அரசு அமைப்பது குறித்தும் பலமான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர் பௌசி -

இந்த முயற்சி வரவேற்கத்தக்கதென்றும், ஒரு தேசிய அரசுதான் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை வழங்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# அகற்றப்படாத கண்ணிவெடிகள்: குடியமரமுடியாமல் மக்கள் அவதி!

## திருமலையில் தொடரும் அவலம்



கருத்தரங்கில் உரையாற்றும் தவசிலிங்கத்தைப் படத்தில் காணலாம்.

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்மக்கள் முன்னர் குடியிருந்து- இராணுவ நடவடிக்கையால் வெளியேறிய பகுதிகளில், மீண்டும் அவர்கள் குடியேறுவதற்கு, அந்தப் பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பது, பெரும் தடைக்கல்லாக இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

இது பற்றி ஆராயும் கூட்டமொன்று, அண்மையில் திருகோணமலையில் - திருகோணமலை மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டது.

திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அபிவிருத்திப் பயிற்சி மையத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், பல்வேறு மனிதநேய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய திருகோணமலை மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ரி.தவசிலிங்கம் - திருகோணமலை மாவட்டத்தில் மீள் குடியமர்வு இடம்பெறுவதிலுள்ள தடைக்கற்கள் பற்றிய ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். இதல்- மீள்குடியமர்வுக்கு முயற்சித்து வருகின்ற தமிழ்மக்கள், தங்களது சொந்தப் பகுதிகளில் விவசாயம், மீன்பிடி போன்ற பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதிலுள்ள தடைகள் குறித்தும், அவர்கள் மீள்குடியமர்வதற்கு அந்தப் பகுதிகளில் விதைக்கப்பட்டிருக்கின்ற கண்ணிவெடிகள், மிதிவெடிகள் சுமுக வாழ்வுக்குத் தடையாக இருப்பது குறித்தும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - தமிழ்மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறிச் சென்ற பின்னர் - சில பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேறியமையால், மீண்டும் தமது சொந்த நிலங்களுக்குத் தமிழ்மக்கள் திரும்புவதிலுள்ள பிரச்சினைகள் பற்றியும் அங்கு ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய திருகோணமலை நகர பிரதேச செயலாளர் எஸ்.அருமைநாயகம் - திருகோணமலை மாவட்டத்தில் பல ஆண்டுகளாக தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த விளாங்குளம் பகுதியில், 72 இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர முயற்சித்து வருகின்ற போதும், அந்தக் கிராமம் முழுவதும் கண்ணிவெடிகளினாலும், மிதிவெடிகளினாலும் சூழப்பட்டிருப்பதால், அவர்கள் தங்கள் சொந்தக் கிராமத்துக்குச் செல்ல அஞ்சுவதாகத் தெரிவித்தார்.

(க)

# தேங்கிக்கிடந்த அடையாள அட்டைகள் நடமாடும் சேவையில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகளின் விநியோகம் நாளை ஆரம்பமாகும். தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான நடமாடும் சேவையில் வைத்தே இவை வழங்கப்படவுள்ளன.

1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்விற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள், இடப்பெயர்வு காரணமாக வெவ்வேறு இடங்களுக்குச் சென்றமையால் தமது அடையாள அட்டைகளைப் பெறமுடியாமல் போய்விட்டது. இவ்வாறானவர்கள் மேற்படி நடமாடும் சேவையில் உரிய அடையாளத்தைச் சமர்ப்பித்து, தமது அடையாள அட்டைகளைத் தத்தமது பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன்- கடந்த காலங்களில் வேறு மாவட்டங்களில் தற்காலிகமாகக் குடியமர்ந்தவர்கள் தமது யாழ்ப்பாண முகவரி மூலமாக- அடையாள அட்டைகளை உரிய ஆதாரங்களைக்காட்டித் தமது பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை நாளைமுதல்!

ஆட்பதிவுத் திணைக்களத்தினால், யாழ்.மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடமாடும் சேவைகள் நாளை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒரு வாரம் வரை நடைபெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையினை யாழ்.குடாநாட்டில் நடத்துவதற்கென ஆட்பதிவுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் துரைராஜா தலைமையில், பன்னிரெண்டு அதிகாரிகள், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் இந்த நடமாடும் சேவை - ஒரே தினத்தில் வெவ்வேறு செயலகங்களில் நடைபெறும்.

இதன்படி நாளை திங்கட்கிழமை- கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலும்,

பதினைந்தாம் திகதி செவ்வாய்கிழமை - சாவகச்சேரி, மருதங்கேணி, ஆகிய பிரதேச செயலகங்களிலும்,

பதினாறாம் திகதி புதன்கிழமை- உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களிலும்,

பதினேழாம் திகதி வியாழக் கிழமை-வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் ஆகிய பிரதேச செயலகங்களிலும்,

பதினெட்டாம் திகதி வெள்ளிக் கிழமை - நெடுந்தீவு, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களிலும் நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் புதிதாகத் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களும், அடையாள அட்டையைப் புதுப்பிப்பவர்களும் அதற்குரிய படிவத்தினை நிரப்பி தேவையான ஆவணங்கள், மூன்று புகைப்படங்கள் மற்றும் கிராம சேவையாளரின் கையொப்பத்துடன் விண்ணப்பிக்கவேண்டும்.

# ஜப்பானிய பிரதி வெளிவுறவு அமைச்சர் இம்மாத இறுதியில் கொழும்பு வருகிறார்

## பேச்சுக்களை மீள ஆரம்பிக்க உதவவும் திட்டம்



ரெஸ்ரோ யனோ

(கொழும்பு)

ஜப்பானிய அரசின் மூத்த பிரதிநிதி ஒருவர் மிகவிரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்வதற்காகவே - இவர் ஜப்பானிய அரசினால் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்.

ஜப்பானிய அரசாங்கம் தனது மூத்த பிரதிநிதியாக, வெளிநாட்டமைச்சரான ரெஸ்ரோ யனோ, இம்மாத இறுதிப் பகுதியில் இலங்கைக்கு அனுப்பிவைக்கவிருப்பதாக, ஜப்பானிய அரசு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள ரெஸ்ரோ யனோ - விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தையைத் துரிதமாக ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ்ப்பாணத்தின் சனத்தொகை 6 இலட்சத்தினை அண்மித்தது!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது, யாழ்ப்பாணத்தில் சனத்தொகை 5 இலட்சத்து 97 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

- இவ்வாறு, யாழ்.அரச அதிபர் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், குடாநாட்டில் மீளக் குடியமர்ந்தோருக்கு 25 ஆயிரம் ரூபா நிதி துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது.

சுமார் 5000 குடும்பங்கள் ஏற்கனவே இந்தத் தொகையைப் பெற்றுள்ளன. அதேவேளை - குடாநாட்டில் 26 ஆயிரம் குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும், அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

## நல்லூர் திருவிழாக் காலங்களில்

# வீட்டு வளர்ப்பு நாய்களை கட்டுப்படுத்த அறிவுறுத்தல்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர்த் திருவிழாக் காலங்களில் - ஆலயத்தை அண்டிய பிரதேசங்களிலுள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை கட்டி வளர்க்கும்படி, சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ். மாநகரசபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கோவில் வீதியைச் சுற்றியுள்ள பிரதேசத்தை நாய்கள் அசுத்தப்படுத்துவதனால் - பிரதிஷ்டை செய்யும் பக்தர்களும், திருவிழாக்களில் கலந்துகொள்ளும் மக்களும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகலாம் என்ற அச்சத்தினாலேயே, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

அத்துடன் - தற்போது நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள மணல் மண்ணினை அகற்றிவிட்டு - புதிதாக மண் பரவுவதற்கான பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## புறநிலை அலகின் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் - இன்று காலை 10 மணிக்கு, பிரதீப் கிஷனின் இயக்கத்தில் உருவான 'மஸே சாஹிப்' என்னும் ஹிந்தித் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

## அதிபர் பதவி வெற்றிடம்

தீவகக் கல்வி வலயத்தில் யாழ். வேலணை மேற்கு நடராசா மகா வித்தியாலயத்துக்கு அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது. தகுதியானவர்கள், விண்ணப்பங்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக தீவகக் கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் கேட்டுள்ளார்.



கரணவாய், பொன்னம்பல வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியை, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகே - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பாடசாலை அதிபர் என்.பொன்னையா ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)



உள்ளூராட்சி வராத்தையொட்டி - பருத்தித்துறை பிரதேசசபை பொது நூலகத்தில் இடம்பெற்ற மரம் நாட்டு விழாவில், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உருத்திரா மரம் ஒன்றை நாட்டுவதையும், அருகே- யாழ். மாவட்ட கடற்தொழில் பரிசோதகர் என்.கதிர்காமத்தம்பி, யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் வி.வீரபத்திரபிள்ளை, பொதுநூலகர் என்.என்.திருச்செல்வம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

## வலி. வடக்கில் 50 வீடுகள் அமைக்கத் திட்டம்

வலி. வடக்குப் பிரதேசத்தில்- வலி. வடக்குப் பிரதேச செயலகத்தினாலும், ஜி.ரி.இசற் நிறுவனத்தாலும் இனங்காணப்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில், 50 வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கு ஜி.ரி. இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதனடிப்படையில், மல்லாகம் மத்தி, அளவெட்டி வடக்கு ஆகிய பிரிவுகளில் தலா பதின்மூன்று வீடுகளும், இளவாலை வடமேற்கு, தெல்லிப்பளை துர்க்காபுரம் பகுதிகளில் தலா பன்னிரண்டு வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. (68)

## கருத்தரங்கு

தரம் 10, தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றிய கருத்தரங்கொன்று, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் - கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களுககுப் பொறுப்பான சேவைக்கால ஆலோசகர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிபபாளர் கேட்டுள்ளார்.

# கால்நடை வைத்தியசாலையில் நடமாடும் விசேட வைத்தியசேவை!

யாழ். கால்நடை வைத்தியசாலையினர - பொதுமக்களின் நன்மைகருதி, நடமாடும் சேவையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் - விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் இந்த நடமாடும் விசேட சேவை வழங்கப்படவுள்ளது.

பிரதி திங்கட்கிழமை தோறும்- கோண்டாவில் சந்தியிலுள்ள நிலையத்திலும், மாதத்தின் கடைசிப் புதன்கிழமைகளில் - யாழ். அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திலும் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.

நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றலுடன், மிருகங்களுக்கான வைத்திய சேவைகளும் அங்கு நடைபெறுமென, கால்நடை வைத்திய அத்தியட்சகர் எம்.தங்கராசா தெரிவித்தார். (17)

# இணைந்தசேவை உத்தியோகத்தர் இடமாற்றங்களைக் கோரலாம்!

## அமைச்சு சுற்றறிக்கை அனுப்பியது

இணைந்த சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்தை - அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்துவதற்கான சுற்றறிக்கையை - பொது நிர்வாக, முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு திணைக்களங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இதன்படி - ஏதேனுமொரு சேவையில், ஒரிடத்தில் இரண்டு வருடங்கள் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கமுடியும்.

அதேவேளை - 53 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள், அவர்கள் விரும்பினால் அல்லது விசேட தேவைகள் இருந்தால் ஒழிய, மாவட்டத்துக்கு வெளியில் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்ற உத்தரவுக் கடிதம் அனுப்பிவைக்கப்படும். ஒக்ரோபர் 8 ஆம் திகதிக்கு முன் மேன்முறையீடு செய்யலாம். நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர், மேன்முறையீடுகளுக்குப் பதில் வழங்கப்படும் என்றும், அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பசறையில் பனிக்கட்டி மழை

பசறைப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன், 15 நிமிடங்களுக்குப் பனிக்கட்டி மழை பெய்தது.

பல மாதங்களுக்குப் பின்னர், இந்தப் பிரதேசத்தில் அதிக மழை பெய்தது. அதன்போதே பனிக்கட்டி மழையும் பெய்தது எனத் தெரியவருகிறது.

## நூற்றாண்டு சிறப்பு மலர் இன்று வெளியீடு

யாழ். புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி, இன்று மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் - பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் தலைமையில், நூற்றாண்டுச் சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது. அத்துடன், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (63)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



பெயர் - யோ.ஸ்ரீதரன்
முகவரி - வலந்தலை, காரைநகர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------------
முகவரி :-----------------------------------------
பிறந்த ஆண்டு:-----------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
-----------------------
பெற்றார் ஒப்பம்




மக்கள் நலன்புரிச் சங்கம் நடத்திய - பாடசாலை மாணவிகளுக்கான பாசறைப் போட்டியில், முதலாம் இடத்தைப் பெற்ற - வேம்படி மகளிர் கல்லூரி மாணவிக்கு, மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (57)

# மருத்துவர்கள் அலட்சியத்தினால் குழந்தைப்பேற்றை இழந்த பெண்!

## ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் பரிதாபம்

கொழும்பு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் மருத்துவர்கள்- தனது குழந்தையையும், தான் எதிர்காலத்தில் கருத்தரிக்கப்படக்கூடிய வாய்ப்பினையும் சீரழித்துவிட்டார்கள் என்று, அங்கு குழந்தைப் பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட தாய் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுகேகொட கலாபத்பிட்டியவில் வசிக்கும் கே.நிஷாந்தி என்ற பெண்ணுக்கே இந்தத் துயரம் நடந்தது.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கும், மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் முறையிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலை 6 மணிக்கு ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டேன். காலை 6.20 இற்குப் பிரசவத்துக்கு உதவும் மருந்தைத் தந்தார்கள். ஆனால், குழந்தை பிறக்கவில்லை. இதனால், சிசேரியன் செய்யுமாறு டொக்டர்களிடம் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால், சிசேரியன் செய்யமுடியாது என்று டொக்டர்கள் சொன்னார்கள்.

ஆனால் - பின்பு சிசேரியன் செய்ய டொக்டர்கள் தீர்மானம் எடுத்தனர். குழந்தையும் கிடைத்தது. ஆனால், மாலை 5.20 இற்கு, பிறந்த குழந்தை இறந்துவிட்டதாக இரவு 10 மணிக்குத் தெரிவித்தார்கள். அத்துடன், எனது கர்ப்பப்பை அகற்றப்பட்டுவிட்டதாகவும் கூறினார்கள் என்று, மேலும் அந்தப் பெண்மணி தெரிவித்தார்.

# நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

யாழ். செயலக உணவுக் களஞ்சியத்தில் லிகிதர்களாகவும், காவலாளிகளாகவும் நீண்டகாலமாகப் பணிபுரிந்த 27 ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, யாழ். திட்டப் பணிப்பாளர் - புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுடன் தொடர்புகொண்டுள்ளார் என அறியவருகிறது.

யாழ். அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதனின் கோரிக்கையை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(17)

# திலங்க! நாங்கள் உங்களுடன்




இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் மிகுந்த செயற்திறன் வாய்ந்தவர் என்று பெயர் பெற்றவர். இதன் காரணமாக அதியுயர் வினைத்திறன்கூடிய செயற்பாடுகளை மற்றோரிடமிருந்தும் எதிர்பார்ப்பவர். இந்தவகையில் கிரிக்கெட் சபையின் நிதிப்பயன்பாடு மற்றும் நிதி முகாமைத்துவம் பற்றிய குறைபாடுகள் பற்றிக் கவனம் செலுத்துகின்றார். இதன் காரணமாக ஒரு அதிரடி நடவடிக்கையை இவர் மேற்கொண்டுள்ளார். அதன்படி, மூன்று பிரபல்யமான கிரிக்கெட் நடுவர்கள் மற்றும் முப்பத்தாறு மாவட்ட, பிராந்தியப் பயிற்றுநர்களைச் சபையின் செயற்பாடுகளிலிருந்து இடைநிறுத்தியுள்ளார். இது தொடர்பில் கருத்துக்கூறும்போது, "இடைக்கால நிர்வாக சபைகளின் பிழையான முகாமைத்துவத்தால் ஏற்பட்ட சுமைகள் அதிகம். இவர்களின் தகுதி, திறமை போன்றவற்றை மீளாய்வு செய்வதற்காகவே இடைநிறுத்தி இருக்கிறோம். இனியும் ஆற்றல் அற்றவர்களின் தரிப்பிடமாக இலங்கைக் கிரிக்கெட் சபை இருக்காது" என்கிறார்.

மூன்று நடுவர்கள் பற்றிக்கூறும்போது, அவர்களின் நடுவர் பணிபற்றிய ஆற்றல் பற்றிய சந்தேகம் எதுவுமில்லை. ஆனால், சபையின் பணியாளர்களாக மாதாந்தச் சம்பளமாக தலா முப்பதாயிரம் ரூபா உட்பட, ஒரு மாதத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரையில் இவர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது. இவர்கள் சபைப் பணிகளிலிருந்து இடைநிறுத்தப்படுகிறார்களே தவிர, நடுவர் பணியிலிருந்தல்ல என்றும் கூறப்படுகின்றது. சபை ஊழியர்களாக இவர்கள் செய்யும் கடமை, நடுவர்களுக்கு SEMINARS நடத்துவது மட்டுந்தான் என்றும் கூறப்படுகின்றது. ஒரு பத்திரிகை எழுத்தாளர், சில பயிற்றுநர்கள் பற்றிக் கூறுகையில்- இவர்கள் இருக்கைகளைச் சூடாக்குவது தவிர வேறொன்றும் செய்வதில்லை என்று நக்கலடிக்கிறார்.


திலங்க சுமதிபால - 'சுரண்டல் பேர்வழிகளுக்கு எமன்'

இந்த நடுவர்களின் செயற்பாடுகளின் வினையாற்றல் ஒரு குழு மூலம் கணிப்பீடு செய்யப்படும் என்றும், அதன்பின் பயன் பொருத்தம் கருதி மீள்நியமனம் வழங்கப்படும் என்றும் திலங்க கூறியுள்ளார். ஏனைய முப்பத்தாறு பேரும்கூட, இடைக்கால நிர்வாக சபையால் நியமிக்கப்பட்டவர்களே. இவர்களின் மாதாந்த ஊதியம் ரூபா பதினைந்தாயிரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள். இவர்களுக்கும் தலையிடி வந்துவிட்டது.

இன்னொரு நேர்முகப் பரீட்சைக்கு இவர்கள் தோற்றியாக வேண்டும். இதில் தேறினால் மட்டுமே மீள்நியமனம். அதோடு இன்னொரு முக்கியமான விடயத்தைத் திலங்க சுட்டிக்காட்டுகிறார். இந்தப் பயிற்றுநர்கள் தத்தம் சொந்த மாவட்டங்களில் நியமனத்தைப் பெற்றுக்கொண்டு, வாழ்க்கையை இலகுவாக்கிக் கொள்வதுடன், பாரபட்சமான முறையில் தமக்கு வேண்டியவர்களை அணிக்குள் நுழைத்துக் கொள்வதையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். மேலும், தற்போது இவர்கள் செய்யும் பணியைவிட, மிகவும் கூடுதலான பணியை இவர்கள் செய்யவேண்டியிருப்பதுடன், உயர் பெறுபேறுகளையும் காட்டவேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிரிக்கெட் சபையின் கடந்தகால வரலாறு பற்றிப் பல்வேறு தரப்பினாலும், கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகிக்கொண்டே வந்திருக்கிறது. அதிலும் நிதி முகாமைத்துவம் பற்றிய விடயங்கள் பெரும் சர்ச்சையை எழுப்பியிருந்தன. திலங்க, சரியான சமயத்தில் மிகச் சரியானதொரு விடயத்தில் கை வைத்திருக்கிறார். இந்த விடயத்தில் இவர் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குற்றம் இழைக்கப்பட்டிருந்தால், சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு அவர்களை உள்ளாக்கவேண்டும். ஏனெனில், கிரிக்கெட் சார்ந்தவர்களின் செயற்பாடுகள் இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளின் சுமைக்கேற்றவாறு அமையவேண்டும். இல்லாவிட்டால், கிரிக்கெட் என்றொரு விளையாட்டு மக்களின் வெறுப்புக்குரியதாக மாறிவிடும். திலங்கவில் அனைவருக்கும் நம்பிக்கையுண்டு என்றே கருதப்படுகிறது.

**- ஜோசப் கிருஷ்ணா.**

# பட்டது போதும் உன்னாலே

சொஹெய்ப் அக்தர் சர்ச்சைகளுக்குக் குறைவில்லாதவர். அத்தோடு எரிச்சலூட்டும் அநாவசியமான பிரச்சினைகளுக்கும் உள்ளாகுபவர். இங்கிலாந்தின் கார்டியன் பத்திரிகைக்கு அக்தர் வழங்கியதொரு பேட்டியில் - அவுஸ்திரேலியாவின் மக்ரா, ஜிலெஸ்பி போன்றோருடன் இணைந்து விளையாடியிருந்தால், எவரையும்விடக் கூடுதலான விக்கெட்டுகளைச் சரித்திருப்பேன். ஆனால், வசீம் அக்ரம், வக்கார் யூனுஸ் போன்ற பந்து வீச்சாளர்கள் தம் உயர்தகைமையை இழந்துவரும் நிலையிலேயே, இவர்களுடன் இணைந்து பந்துவீச வேண்டிய நிலைக்கு உள்ளானேன். இதுவே என்னை வளர்த்துக்கொள்ள முடியாமற்போனமைக்குக் காரணமாகும் என்று கருத்துக் கூறியிருக்கிறார். இந்த அநாவசியமான கருத்தால் தற்போது அக்தார் நீதிமன்றம் ஏறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். பாகிஸ்தான் பிரஜை ஒருவர் - இவர்மீது வழக்குத்தொடுத்துள்ளார். அதாவது, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மீதான கருத்துக்கள் - பாகிஸ்தான் நாட்டின் பெருமைக்கும், கீர்த்திக்கும் பங்கம் விளைவிப்பதாக இருக்கிறது என்று சொல்லியே, இந்த வழக்கை அக்தார் மீது தொடுத்திருக்கின்றார். தற்போது இங்கிலாந்தின் DURHAM அணிக்காக அக்தார் விளையாடிக்கொண்டிருக்கும் நிலையில், முதலாவது தவணையில் நீதிமன்றத்தில் இவரால் ஆஜராக முடியாமலிருக்கும்.

மேலும், பாகிஸ்தானுக்கு - பங்களாதேஷ் அணி வரும்போது, அந்தத் தொடரிலும் பங்குகொள்ள இயலாதவாறு இங்கிலாந்தில் அக்தாருக்கு வேலையிருக்கும். இருந்தாலும், நீதிமன்ற ஆணைக்கு இவர் கட்டுப்பட்டுத்தானாக வேண்டும். உலகக் கோப்பைப் போட்டிகளின் முதற்சுற்றிலேயே, பாகிஸ்தான் தோல்விகண்டபின் அணியிலிருந்து தூக்கி எறியப்பட்ட ஏழு ஜாம்பவான்களில் அக்தாரும் ஒருவர். ஆனால், மீண்டும் அணிக்குத் தெரிவாகினார் அவர். தெரிவுசெய்யப்படும் பொழுதே இவரது நடத்தை தொடர்பாகவும், எதிர்வரும் காலங்களில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் கிரிக்கெட் சபையால் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருந்தும் அக்தார் தன் பாணியை மாற்றிக்கொள்ளத் தயாரில்லைப் போலத்தெரிகிறது. 'பந்தயம் பிடிகெடுகிறேன்' என்பவர்கள் வரிசையில் அக்தாரையும் சேர்த்துக்கொள்ளலாம் போலத்தெரிகின்றது. அதுவும் போயும் போயும் ஆசிய கிரிக்கெட் தொடர்பில் எவ்வாறு நாடுகளைக் கொச்சைப்படுத்தலாம் என்று பிரித்தானியப் பத்திரிகைகள் காத்துக்கொண்டிருக்கும் போது, அக்தார் அவர்களுக்கு அவல் கொடுத்திருக்கிறார். இனிமேலும் அக்தாரைப் போன்ற பொறுப்பற்றவர்களைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பொறுத்துக்கொள்ளுமா தெரியவில்லை.


சொஹெய்ப் அக்தார் - கெடுகுடி சொற்கேளாது

இந்த வெப்பிசாரத்திலிருந்து சிறிது விலகிக்கொள்ளலாம் என்பதுபோல, இன்னொரு செய்தி. 1998 இன் பின் கிரிக்கெட் 'A' அணிகள்கொண்ட முத்தரப்புக் கிரிக்கெட் போட்டிகள் தொடர் ஒன்றை, நவம்பரில் பாகிஸ்தானில் நடாத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இதில் பங்குகொள்ளப்போகும் நாடுகள் - பாகிஸ்தான், இலங்கை, இந்தியா. 1988 - 1989 காலப் பகுதியில் இந்தியா - பாகிஸ்தானுக்கு டெஸ்ட் தொடர் ஒன்றுக்கு வருகைதந்த பின், எந்தவிதக் கிரிக்கெட் தொடர்பும் பாகிஸ்தான் மண்ணில் - பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இருக்கவில்லை. இதற்கிடையில் அடுத்தமாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் 'A' கிரிக்கெட் முக்கோணத் தொடரொன்றில் இந்தியாவும், பாகிஸ்தானும் விளையாடப் போவதாக ஒரு செய்தி. எப்படியும் ஆசிய நாடுகள் இரண்டும் தமக்குள்ளிருக்கும் பிணக்குகளைத் தீர்த்துக்கொண்டு, பலமான கிரிக்கெட் உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**- மக்டலின் மரியா.**



மரியன் ஜோன்ஸ், கொமரி -'பெற்றெடுத்த உள்ளங்கள்'

மரியன் ஜோண்ஸ் - ரிம் மொண்ட்கொமரி ஜோடி, தற்போது தமக்கெனப் புதிதாக ஒரு பயிற்றுநரைத் தெரிந்தெடுத்துள்ளார்கள். அவர் பெயர் டான் பாவ் (DAN PFAFF). இவர் லேசுப்பட்டவரல்ல. 1996 இல் கனடாவின் டெனொவுன் பெய்லி, அட்லான்டா ஒலிம்பிக்கில் 9.84 செக்கனில் 100m ஓடிச் சாதனை புரிந்தபோது, அவரின் பயிற்றுநர் இவர்தான். இவர் வகிக்கும் பதவி, ஆசிரியர் பதவி. அதாவது, டெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் உதவிப் பயிற்றுநராக ஏழு வருடங்கள் கடமையாற்றியவர். தற்போது உலகின் இரண்டு சாதனை வீரர்களின் பயிற்றுநர் (பயிற்றுநர் என்பவர் இப்படியான தகுதிகளையெல்லாம் கொண்டிருக்கவேண்டுமா என்றும் ஒரு குரல் கேட்கிறது). டான்-தடம் மற்றும் களம் இரண்டு துறைகளிலும் நிபுணராக இருப்பது தமக்கு மிகவும் வாய்ப்பு என்கிறார்கள் தம்பதியர். ரிம் மொன்ட்கொமரி, உடனடியாகவே பயிற்சிகளை ஆரம்பிக்க, மரியன் ஜோண்ஸ் தனது மகப்பேற்றின்பின் செப்ரெம்பரில் பயிற்சியை ஆரம்பிக்க இருக்கிறார்.

1996 இல் டெனொவன் பெய்லி, 9.84 செக்கன் சாதனைக்கான பெருமையைப்பெற, இந்தக்கனடியரின் சாதனை, பின்னர் - அமெரிக்கரான மொறிஸ் கிறீனால் முதன்முதலாகத் தகர்க்கப்பட்டது. அதன்பின் இன்னொரு அமெரிக்கரான ரிம் மொன்ட்கொமரி 9.78 செக்கனில் ஓடி - கிறீனை முறியடித்து, தான் சாதனையாளராகினார். தற்போது புதிய பயிற்றுநரின் வழிகாட்டலில் எப்படிச் சாதிக்கிறார்கள் இருவரும் என்பதை ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

# எம்மைச் சேரும்

இது ஒருபுறமிருக்க, கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இன்னொரு தடகளப் போட்டியையும் மொன்ட்கொமரி புறந்தள்ளிவிட்டார். ஏற்கனவே சுவிற்சர்லாந்து மற்றும் பிரான்ஸில் நடைபெற்ற தடகளப் போட்டிகளைத் தொடர்ந்து, தற்போது இத்தாலியில் நடைபெறவுள்ள போட்டிகளையும் தவிர்க்கின்றார் அவர். காரணம் - புதிதாகப் பிறந்த மகன்தான். மொன்ட்கொமரி தனது மகன் பிறந்தது பற்றியும், மகனோடு நேரத்தைச் செலவிடுவது பற்றியும் மகிழ்ச்சி தெரிவித்த அதேவேளை, தனது முதல் இரண்டு பிள்ளைகளின் ஜனனத்தின்போது, இப்படி ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று ஆதங்கப்படடுள்ளார். ஆனால், மரியன் ஜோண்ஸுக்கு இதுவே முதற் குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, பாரிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஓகஸ்ட் 23 இல் பாரிஸில் ஆரம்பிக்கப்போகின்றன. எனவே, மொன்ட்கொமரி அதற்கு முன்னதாகச் சில தடகளப்போட்டிகளில் கலந்துகொண்டு, தன்னைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டும் என்கிறார்கள் விளையாட்டு ரசிகர்கள். ஏனெனில், 100m ஓட்டப்போட்டியில் முதலிடம் பெறுவதற்கென்று, மிக ஆர்வத்துடன் பல அதீத திறமைசாலிகள் காத்துக்கிடக்கிறார்கள் என்பதை ரிம் மொன்ட்கொமரி மறந்துவிடக்கூடாது. **- செந்தூரம்**



ஓடும் வரை ஓடலாம்

# EVER GREEN அம்மையார்



மாட்டீனா நவ்ரடிலோவா - இளமை இதோ இதோ

இவ்வருட விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் மிக ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்டது மகளிர் ஒன்றையர் ஆட்டந்தான். என்றாலும், ஏனைய பிரிவுகளும் முக்கியத்துவம் குறையாதவையாகவே இருந்தன. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் - அன்ரீ அகாசி, நான்காவது சுற்றில் மார்க் பிலிப்போஸுடனான ஆட்டத்தில் தோல்வியுற்று அகன்றதும், அந்தப் பிரிவில் இருந்த ஆர்வம் குறைந்தது உண்மையே. ஆனால், மறுபுறம் 21 வயதான சுவிற்ஸ்சர்லாந்தின் றொஜர் பெடரர் பலம்வாய்ந்த அமெரிக்க வீரர் அன்டி றொடிக்கை அரை இறுதிப் போட்டியில் வெற்றிகண்டதும், மீண்டும் ஆண்கள் ஒற்றையர் பக்கம் ரசிகர்களின் பார்வை திரும்பிற்று. ஆனால், மறுபுறம் மார்க் பிலிப்போஸ் - பிரான்ஸின் செபாஸரின் குறொஸ்ஜீனைத் தோற்கடித்ததும், அநேகமாக அவரே இம்முறை கிண்ணத்தை வெல்லக்கூடும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது. ஏனெனில், 2001 இல் பெடரர் - பீட் சாம்பிராசை ஒரு சுற்றில் வெற்றிகண்டிருந்தாலும், கடந்த வருடம் முதற்சுற்றிலேயே வெளியேறியவர் பெடரர். இருந்தாலும், இறுதியாட்டம் மிகவும் எதிர்பார்ப்புக்குரியதாகிவிட்டது.

கடந்த ஞாயிறன்று பெடரரும், பிலிப்போஸும் சந்தித்தபோது, 7 - 6, 6 - 2, 7 - 6 என்ற செட் கணக்கில் பிலிப்போஸைத் தோற்கடித்து, 2003 ஆம் ஆண்டின் ஆடவர் ஒற்றையர் சாம்பியனாகினார் பெடரர். வெற்றிபெற்றதும்- இது ஒரு கனவு. இந்தக் கனவு நனவாகியது என்று கூறினார். நான் சிறுபையனாக இருக்கும்போது, விம்பிள்டன் கிண்ணத்தை வெல்வேன் என்று பகிடியாகக் கூறுவதுண்டு. ஆனால், இன்று உண்மையாகவே வென்றுவிட்டேன் என்பவர் - அரை இறுதி ஆட்டமும், இறுதி ஆட்டமும் மிகக் கடுமையானவையாக இருந்தன என்கிறார். பெண்கள் ஒற்றையர் பிரிவில் மாட்டீனா ஹிங்கிஸ் கடந்த காலங்களில் சுவிற்ஸ்சர்லாந்துக்குப் பெருமைதேடிக் கொடுத்தார். இன்னொரு சகாப்தம் பெடரருடன் ஆரம்பமாகிறது என்கிறார்கள் விமர்சகர்கள்.

மறுபுறம், பிலிப்போஸ் - நிறைந்த தன்னம்பிக்கையுடன் பேசுகின்றார். நான் மனந்தளர்ந்துவிடவில்லை, என்றாவது ஒருநாள் விம்பிள்டன் கிண்ணத்தையடைந்தே தீருவேன் என்கிறார் நம்பிக்கையுடன். நான் மிகுந்த பிரயத்தனத்தின் பின்பே இங்கு வந்தேன். ஆனால், ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. ஆனால், இது முடிவல்ல. இதுவே எனது அடுத்த கட்டத்துக்கான ஆரம்பம் என்கிறார். பெடரரின் விளையாட்டைப் பாராட்டும் பிலிப்போஸ் - எவ்வாறு காயங்கள், உபாதைகளிலிருந்து மீண்டுவந்து, மூன்று இறுதிப்போட்டிகளில் தோற்று, 2001 இல் தனது முயற்சியால் கொரான் இவானசேவிச் - விம்பிள்டன் பட்டம் வென்றாரோ, அதேபோல நானும் வெல்வேன் என்கிறார் பிலிப்போஸ்.

இது ஒருபுறமிருக்க, நான்காவது சுற்றில் வெளியேறிய அகாசி, அடுத்தவருடமும் நான் விம்பிள்டன் வருவேன். எனக்கு வயது ஒரு பொருட்டல்ல என்கிறார். அற்புதமானதொரு வீரர் அகாசி. அவர் மைதானத்தில் நடந்துகொள்ளும் நாகரிகத்துக்காகவே, நிறைய ரசிகர்களைச் சேகரித்து வைத்திருப்பவர். அவரது மனைவி ஸ்ரெபிகிராவ் - புகழ்பெற்ற ரெனிஸ் வீராங்கனை. கணவனின் எண்ணத்தை நிறைவேற்ற நிச்சயம் ஸ்ரெபிகிராவ் ஒத்துழைப்பார்.

இம்முறை நடந்த விம்பிள்டன் போட்டிகளில் இன்னொரு பிரிவும் ஆர்வத்துக்குரியதாகி இருந்தது. அதுதான் மாட்டீனா நவ்ரடிலோவா மற்றும் இந்தியாவின் லியாண்டர் பயஸ் இருவரும் இணைந்த கலப்பு இரட்டையர் ஆட்டம். இந்த ஆட்டத்தில் சாம்பியன் பட்டம் பெற்றவர்கள் இவர்கள் இருவரும் தான். மாட்டீனா அம்மையாருக்கு வயது 46. இவர் ரெனிஸ் உலகில் ஒரு சகாப்தம். 1973 இல் களத்தில் இறங்கிய இவர், இங்கிலாந்தில் பெற்ற வெற்றிகள் நம்பமுடியாத



அன்ரி அகாஸி - 'கண்ணீரல்ல வியர்வை'



பெடரர் - 'கனவா இது நனவா'

பட்டியல். மகளிர் ஒற்றையர் பட்டங்கள் ஒன்பது. மகளிர் இரட்டையர் பட்டங்கள் ஏழு. கலப்பு இரட்டையர் பட்டங்கள் நான்கு. இந்தப் பாரிய தகுதியைக்கொண்ட மாட்டீனா, கலப்பு இரட்டையர் பட்டம் வென்றதும் சிறு குழந்தையாகிவிட்டார். என்னால் பேசவேமுடியவில்லை. சிலமணி நேரத்துக்குமுன்- றொஜர் பெடரர் எப்படி இருந்தாரோ அபபடித்தான் நான் இருக்கிறேன். நான் மீண்டும் புற்தரையின் சிறுபகுதியை நினைவுச் சின்னமாகக் கொண்டு செல்லப்போகிறேன் என்பவர் - அப்படியே செய்தார். லியான்டர் பயஸ் கருத்துக்கூறும்போது, மாட்டீனா அம்மையார் ஒரு மாபெரும் சகாப்தம். உண்மையில், அவருடன் இணை சேர முடியுமா என்று எண்ணுவதே ஒரு கனவு. அது இன்று நனவாகி இருக்கிறது என்கிறார். மாட்டீனா போன்றவர்கள் இளந்தலைமுறையினருக்கு எத்தகையதொரு முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். விம்பிள்டனின் புற்றரைத் தளங்களில் சாம்பியன் பட்டம் பெறுவதே உலகின் முதற்தர ரெனிஸ் வீரர்களின் கனவு. அதுவே அவர்களுக்குப் பெருமை. அதேவேளை, மாடீனா நவ்ரடிலோவா போன்ற ஈடிணையற்ற வீராங்கனைகள் விம்பிள்டன்- புற்றரையில் கால்பதிப்பது விம்பிள்டனுக்குப் பெருமை என்றும் கொள்ளலாம் அல்லவா!

- **நிர்மலன்**

# சக்கரங்கள் சுழல்கின்றன



பிறைன் லாறா - 'நானே நம்பர் வண்'

மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு டெஸ்ட் போடடித் தொடருக்காக இலங்கை அணி- மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்ல முன்னமே, இலங்கை அணியின் நம்பிக்கை உயர்வாகவே இருந்தது. கருத்துக்கள்கூட அந்தவகையில் முன் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுப் பயணம் முடியவடைந்ததும், எல்லோருக்கும் நாடி விழுந்துவிட்டது. ஏனெனில், மேற கிந்தியத் தீவுகள் அணி - மூனறு ஒருநாள் போட்டிகளில் மூன்றாவதை வென்றது மட்டுமன்றி, டெஸ்ட் தொடரை 1-0 என்றவாறு வென்றுவிட்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைமைப் பொறுப்பை கார்ல் ஹூப்பரிடம் இருந்து பிறைன் லாறா கையேற்றபோது, வளர்ந்துவரும் அணியை இவர் போட்டுடைக்கப் போகிறார் என்ற கருத்தும் பரவலாக இருந்தது. அவுஸ்திரேலியா - மேற்கிந்திய அணியை வென்றுகொண்டுவந்த விதம், அந்தக் கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக இருந்தது என்றும் கூறலாம். ஆனால், தோல்விகளூடே மேற்கிந்தியத் தீவுகள் அணி மிக் விரைவாக வளர்ந்தது என்பதுதான் உண்மை. இதனை, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட்டை வென்றதன் மூலமும், இலங்கையுடன் தற்போது பெற்ற பெறுபேற்றின்மூலமும் நன்கு விளங்கிக்கொள்ள முடிகின்றது. அண்மையில் பிறைன் லாறா - ஒரு பேட்டியில் தங்களுக்கு நிறைய அனுபவங்களையும், படிப்பினைகளையும் தந்த அவுஸ்திரேலியா அணிக்கு நன்றி கூறியிருக்கிறார் என்றால், இவர் எத்தகைய திட்டங்களை வகுத்து இன்று எல்லோரும் மேற்கிந்திய அணியைப் பற்றிப் பேசுவதற்கு சாதனை அணியாக்கியிருக்கிறார் என்பது புரியும். அவர் அணித்தலைவராக தன் இளம் வீரர்களுக்கு வழிகாட்டியதுமன்றி செயலிலும் காட்டியிருக்கிறார். டெஸ்ட் தொடரில் இரட்டைச் சதம் ஒன்று, அரைச்சதம் ஒன்று, அதிகளவு ரன்கள் சேர்த்த முறையில் ஒருவர் **(Partner ships)** என்று பதிவுசெய்திருக்கிறார். இந்தவகையில், மேற்கிந்திய அணியில் தலைவரின் ஆளுமை, அவரது வழிகாட்டலில் செயற்பட்ட இளந்தலைமுறை வீரர்கள் என்று தற்போது பார்வையெல்லாம் மேற்கிந்தியத் தீவுகள் பக்கந்தான்.

இதேவேளை - ஒப்பீட்டளவில் இலங்கை அணி - மேற்கிந்தியத் தீவுகள் அணியைவிட அனுபவம் கூடிய அணி. அத்தோடு மூத்த வீரர்கள் பலரைக் கொண்ட அணியும்கூட. மேலும், முன்னாள் தலைவர் சனத் - ஒருநாள் தலைவர் அத்தபத்து, டெஸ்ட் அணித்தலைவர் ஹஸான் திலகரட்ன என்று ஒருவரிசை. சமிந்த வாஸ், முரளிதரன் என்றால் அறிமுகம் தேவையில்லை. இந்த நிலையில், டெஸ்ட் தொடர்த் தோல்வி, கடும் கண்டனங்களை இலங்கை அணிமீது திருப்பிவிட்டிருக்கிறது. கூடுதலான கணைகள் துடுப்பாட்ட வீரர்கள் மீதுதான் செலுத்தப்படுகின்றன. இவர்கள் தொடர்பில் பல வினாக்கள் எழுப்பப்படுகின்றன. மூத்த வீரர்கள் முதிர்ந்துவிட்டார்களா? கொழுத்த சம்பளம் வருகிறதுதானே என்ற அசட்டையா?

அல்லது டெஸ்ட் ஆட்டத்துக்குரிய இயல்புகளை இழந்துவிட்டார்களா என்று பலவிதமாகக் கேள்விகளை எழுப்புகிறார்கள். நின்று நிதானித்துப் புலன்களை ஒருங்கிணைத்து, ஒழுங்குபடுத்தி ஆடும் திறனின்மையே இவர்களின் பெருங்குறையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மாவன் அத்தபத்துவைத் தவிர, ஏனையவர்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றவில்லை என்று கருதப்படுகிறது. இலங்கை அணித்துடுப்பாட்ட வீரர்கள், லாறாவைப் பார்த்து நிறைய விடயங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள் விமர்சகர்கள்.

2002 ஆம் ஆண்டு இங்கிலாந்துத் தொடரிலிருந்து தொடர்ந்து இலங்கை அணி வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. அதுவும் டெஸ்ட் தரத்தில் மூன்றாவது இடத்திலிருந்த இலங்கை, இந்தச் சுற்றுப்போட்டியின் பின் ஐந்தாவது இடத்துக்குச் சரிந்துவிட்டது. இலங்கை அணி - ஒரு கணிப்புப் பெற்ற அணியாக மாறியபின்- இவ்வளவு தாழ்நிலை, இதுவே முதன்முறை என்று சுட்டிக் காட்டுகிறார்கள் விமர்சகர்கள். பிரதம தெரிவாளர் லலித் களுபெரும கருத்துக்கூறுகையில், மூத்த வீரர்கள் தொடர்ந்து அணியை முதுசமாக்கிக் கொள்ளமுடியாது என்கிறார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை 'A' அணியில்கூட தேசிய அணியில் திடீரென்று நுழையக்கூடிய ஆற்றலுள்ள துடுப்பாட்ட வீரர்களின்மை, எதிர்கால அச்சத்தினை ஏற்படுத்துகின்றது என்கின்றார் அவர். டேவ் வட்மோரும் இல்லாத நிலையில் சர்வதேசத் தரத்திலான வழிகாட்டல் இடைவெளி ஒன்று விழுந்துவிட்டது உண்மைதான். ஆனால், அதுவே வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகக் கொள்ளமுடியாது. லாறாவின் தகுதியில் ஒரு அணித்தலைவர் இலங்கை அணியில் தெரியவில்லை.

அதேபோன்று - கிறிஸ் கைல், வேவல் ஹைண்ட்ஸ், சர்வான், மார்லன் சாமுவெல்ஸ், ஒமாரி பாங்க்ஸ் போன்று பெயர் சொல்லக்கூடிய இளம் வீரர் யாரையும், இலங்கை அணியில் சுட்டிக்காட்டவும் இயலவில்லை.

மேலும், டெஸ்ட் ஆட்டங்களில் அந்நிய மண்ணில் அந்தந்த நாட்டைத் தோற்கடிப்பது பெரும் சாதனை. இந்தவகையிலும் இலங்கை அணி சாதித்ததாகத் தெரியவும் இல்லை. வருட இறுதியில் இங்கிலாந்து அணி இலங்கை வருகிறது. தற்போது இங்கிலாந்து அணி தன்னை நிரூபித்துக் கொள்ளமுயன்று கொண்டிருக்கும் ஒரு காலகட்டமாகும். இலங்கை, தம் மண்ணிலே இங்கிலாந்து வெல்வதைப் பார்த்துத் தலைகுனியப் போகிறதா? அல்லது இங்கிலாந்து அணியைத் தோல்வியுறச் செய்வதன்மூலம் தலைநிமிரப் போகிறதா? ஜோண் டைசன் இலங்கை அணியை எவவாறு கையாளப்போகின்றார்? பிறைன் லாறா - அவுஸ்திரேலிய அணியுடன் பெற்ற தோல்விகளின் அனுபவத்தில் வெற்றிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். இலங்கை அணி - மேற்கிந்திய அணியிடம் பெற்ற டெஸ்ட் தொடர் தோல்வியிலிருந்து பெற்றுக்கொண்ட, பாடங்களிலிருந்து பயின்று, இங்கிலாந்துக்குப் பாடம் புகட்டுமா?

- **ஜோசப் கிருஷ்ணா.**



வேவல் ஹைண்டஸ் -
'பிரெட்லி பாராட்டினீங்கள், நான் சாத்துறன்'

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்பு*
*இடுக்கண் இடர்பாடு உடைத்து*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## பழைய குருடி...?

வடக்கு - கிழக்குக்கு வேண்டிய இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக அரசாங்கத் தரப்பிலிருந்து வெளிவருகின்ற தகவல்கள் ஆரோக்கியமானவையாக இல்லாதிருப்பதோடு, பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையிலிருந்து, அதனை மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவரச் செய்யும் சக்தியை - அரசின் புதிய திட்டவரைபு கொண்டிருக்கிறதா என்ற சந்தேகத்தையுமே ஏற்படுத்துகின்றன.

அரசு, ஏற்கனவே இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது தொடர்பில் - ஏற்றுக்கொள்ளத்தக்க வீச்சுக்கொண்ட எந்தவொரு யோசனையையும் வெளியிடாமல் -

வார்த்தை ஜாலங்களால் பூசிமெழுகப் பார்த்த கதை, புதிய திட்டவரைபிலும் தொடர்ந்து வருகின்றதோ என்ற ஐயம் இப்போது மீண்டும் தோன்ற ஆரம்பித்துள்ளது.

வடக்கு - கிழக்கில், புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகள் உரியமுறையில் விரைவாகவும், செயலாற்றலுடனும் முன்னெடுக்கப்படவும், மக்களை அவை சென்றடைவதை உறுதிப்படுத்துவதுமான- அரசியல், நிர்வாக அதிகாரங்கள் பொருந்திய இடைக்கால நிர்வாகம் ஒன்றே அமைக்கப்பட வேண்டுமென்பதை - பல தடவைகளிலும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் விடுதலைப் புலிகள் வலியுறுத்திச் சொல்லியிருப்பதன் பின்னரும் -

அரசாங்கம் இனியும சவாப்புச்சொல்லுமானால், அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் ஆயத்த யோசனைகள் எதுவும், அரச தரப்பிடமில்லை என்பதையே முடிவாகக் கொள்ள வேண்டியிருக்கும்.

உயர் ஆலோசனைச் சபை என்ற பெயரில் காலத்தைக் கடத்திய பின்னர் - தற்போது மாகாண அளவிலான நிர்வாகக் குழு என்னும் திட்டம் பற்றியே அரச தரப்பு - தனக்கு நெருக்கமான சட்ட நிபுணர்களுடன் கலந்தாய்வு செய்திருப்பதாக - அந்த நிபுணர் வட்டாரங்களிலிருந்து நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மனந்திறந்து பேசிய இந்த நிபுணர்களில் ஒருவர் - அரசாங்கத்தின் முழுமையான நோக்கமும், பேச்சுக்களுக்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்வதே என்றும் -

புதிய திட்டவரைபு - விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்பதான அதிகாரங்களைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அப்படியானால், மீண்டும் ஒரு தடவை 'பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடும்' சூட்சுமத்தைத்தான் அரசாங்கம்- புதிய திட்டவரைபு என்ற பெயரில் முன்வைக்கப்போகிறது என்றே தெரியவருகிறது.

அரசின், மாகாண மட்ட நிர்வாக அமைப்பு யோசனையானது - இதுவரை வெளித்தெரியவந்துள்ள தகவல்களின் அடிப்படையில் - இலங்கையின் அரசியல் யாப்புக்குள் அடங்கிக் கிடக்கும் அமைப்பொன்றே எனவும் அறியமுடிகின்றது.

எனவே, பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான புதிய முயற்சிகள் எந்தளவு தூரம் சாத்தியமானதாக, நம்பிக்கைத்தன்மையாக இருக்கும் என்ற சந்தேகம் துளிர்விடவும் ஆரம்பித்திருக்கிறது.

அதேவேளை - இடைக்கால நிர்வாகம் தொடர்பில் இந்தியத் தரப்பிலிருந்தான அழுத்தங்களின் பாதிப்புக்களும், வெளிப்படையாகத் தென்பட ஆரம்பித்துள்ளன.

விடுதலைப் புலிகள் முக்கிய பங்கேற்கும் இடைக்கால நிர்வாகம் ஒன்று தனக்கு உவப்பான செய்தியல்ல என்ற நிலையில் - மாகாண மட்ட நிர்வாகக் குழுவொன்றை அமைத்து, குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வரையறைக்குள்ளாகவே - புதிய திட்டவரைபினையும் உள்ளடக்கவேண்டும் என்ற அழுத்தத்தை இந்தியா ஏற்கனவே பிரயோகிக்கத் தொடங்கியிருப்பதாகவும், இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அத்துடன் - தனது ஆதரவுத் தமிழ்க் குழுக்களான- ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) யையும், ஈ.பி.டி.பியையும் இடைக்கால அலகுக்குள் புகுத்திவிடவேண்டுமெனவும் இந்தியா தலைநீட்டி வருகின்றது.

இவ்வாறான சூழலில் - ரணில் அரசாங்கம், திட்டவரைபை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதில் தாமதத்தை ஏற்படுத்தும் யுக்தியைப் பயன்படுத்தியே - தனது காய் நகர்த்தலை ஆரம்பித்திருக்கிறது.

இதோ அனுப்புகிறோம், அதோ அனுப்புகிறோம் எனப் பிரதமர் ரணிலும், பேராசிரியர் பீரிஸும் , பேணாட் குணதிலகவும் விடுத்த அறிவிப்புகளின் அடிப்படையில் பார்த்தால் - திட்டவரைபு இன்று உலகம் முழுதும் சுற்றிவரும் காலமாகிவிட்டது.

அதேவேளை - விடுதலைப் புலிகளை மறுபடியும் சர்வதேச அழுத்தம் ஒன்றுக்குள் வைத்துக்கொண்டே திட்ட வரைபைப் பற்றி அவர்களுடன் பேசலாம் என்ற யோசனையும், அரசாங்கத் தரப்பில் இருப்பதாகத் தெரிகின்றது.

நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜோன வெஸ்பேர்க்கை இதற்காகப் பயன்படுத்த முனைந்த அரசு- அவர், சலப்புற்று மாலைதீவுக்கும், பின்னர் - ஒஸ்லோவுக்கும் திரும்பிவிட்டதன் பின்னர் -

மீண்டும் ஜப்பானை அரங்குக்கு அழைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்த வகையில் ஜப்பானிய சிரேஷ்ட வெளியுறவு அமைச்சரின், இம்மாத இறுதிக்குள்ளான விஜயமும் இந்தத் திட்டத்தோடு தொடர்புடையதா என்பது விரைவில் வெளிச்சமாகிவிடும்.

எது எப்படி இருந்தாலும் - அரசு தரப்பில் தெரியும் சறுக்கல்களும், தாமதங்களும் மறுபடியும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்கான முயற்சிகளாகவே அமைந்தாலும், விடுதலைப் புலிகளிடம் மட்டும் இந்த பருப்பு வேகாது என்பது நிதர்சனமானதாகும்.

# ஜே.வி.பி - பொ.ஐ.மு. கூட்டணியின் சின்னமாகட்டும் சவப்பெட்டி!

**எதிர்க்கட்சியினர் அறிவது!**

கடந்தவாரம் எதிர்க்கட்சியினரான ஜே.வி.பி. மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அங்கத்தவர்களாகிய நீங்கள், நாடாளுமன்றில் நடந்துகொண்டவிதம் - சிறுவயதில் நான் பார்த்த பழைய தமிழ், ஆங்கில சினிமாப் படங்களைத்தான் நினைவூட்டியது.

ஒரு ஆங்கிலத் திரைப்படத்தில் கிளிண்ட் ஈஸ்ட்வுட் ஒரு பிரேதப்பெட்டியை எப்போதும் கொண்டுதிரிவார். அதேபாணியில் 'எங்க பாட்டன் சொத்து' என்ற தமிழ் படத்தில் ஜெய்சங்கர் ஒரு பிரேதப்பெட்டியை எப்போதும் தன்னோடு கொண்டுதிரிவார்.

அதாவது, வில்லனை எப்படியும் கொலை செய்வேன் என்று சூளுரைத்தபடி, இருவரும் அதற்கு ஆயத்தமாக அந்தப் பிரேதப்பெட்டியைக் கொண்டுதிரிவார்கள்:

அடுத்த தேர்தலில் ஜே.வி.பி - பொதுஜன ஐக்கிய முன்னணி இருகட்சிகளும் இணைநது செயற்படவுள்ள நிலையில், அதற்கு முன்னோடியாக இருகட்சியினரான நீங்கள் இருவரும் இணைந்து, ஒரு காரியம் செய்திருக்கினறீர்கள். அதுதான் நாடாளுமன்றத்துக்குப் பிரேதப்பெட்டியொன்றைக் கொண்டுவந்துள்ளீர்கள். அங்கே ஒரு செத்தவீட்டையே நடத்தியிருக்கின்றீர்கள்.



ஜே.வி.பியின் ஸ்தாபகர் றோகண விஜேவீர

இலங்கை நாடாளுமன்றம் இந்த விதமான பல சம்பவங்களைக் கண்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன் - ஒருதடவை கண்டி மாவட்ட முன்னாள நாடாளுமன்ற உறுபபினர் தஹநாயக்க - கோவணத்துடன் நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தார். நாட்டில் உடுபுடவை துணிகளின் விலை ஏறிவிட்டது என்பதைக கண்டிப்பதற்காக, அவர் வெறும் கோவணத்துடன் நாடாளுமன்றத்துக்குச் .சென்றார்.

அதற்கு முன்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இரத்தக்காயத்துடன் நாடாளுமன்றம் சென்றிருந்தனர். காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் அடிவாங்கிய இரத்தக்காயத்துடனேயே அவர்கள் நாடாளுமன்றம் சென்றனர்.

இந்தவகையில் - அவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு அடையாளமாகக் கோவணத்துடனும், இரத்தக்காயத்துடனும் நாடாளுமன்றம் சென்றனர்.

ஆனால், இந்தவாரம் நீங்கள் பிரேதப் பெட்டியொன்றைக் கொண்டுசென்றது, உங்கள சொந்த நலனுக்காக என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் பட்டினியில் இறக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டவோ அல்லது யுத்தத்தில் அப்பாவிக் கிராமப்புறச் சிங்கள இளைஞர்கள் - இராணுவத்தில் இறக்கின்றனர் என்பதைக் காட்டவோ நீங்கள் பிரேதப்பெட்டிகளைக் கொண்டுசெல்லவில்லை.

தேர்தலின்போது கண்டியில் பலரைக் கொலைசெய்து, வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கு எதிராக, நீங்கள் பிரேதப் பெட்டியைக் கொண்டுவரவில்லை.

மாறாக, நீங்கள் வளர்த்துவிட்ட ஆயுதக் கலாசாரம் உங்களைப் பதம்பார்க்கத் தொடங்கிவிட்டது என்பதைக் கண்டு அஞ்சி, இந்தப் பிரேதப் பெட்டிகளைக் கொண்டுவந்தீர்கள்.

இது - ஜே.வி.பியினரும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் இணைந்தால், இலங்கை மக்களின் எதிர்காலம் எந்தப் பாதையை நோக்கிச்செல்லும்? அதாவது, மக்களின் எதிர்காலம் புதைகுழியை நோக்கியே செல்லும் என்பதைக் காட்டுகின்றது.

கடந்தவருடம் நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் - நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பார்வையிடவந்தபோது, அவரை வைத்துக்கொண்டே - அவரைப்பற்றிக் கேவலமாகப் பேசி, நையாண்டி செய்தீர்கள். அப்போதே இலங்கையின் நாகரிகம், நாடாளுமன்ற ஜனநாயகம் என்பவற்றை நீங்கள் பிரேதப்பெட்டியில் வைக்காமலேயே புதைத்துவிட்டீர்கள்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளைக் குழப்ப, நீங்கள் - இரு கட்சியினரும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள்மூலம் - நாட்டை எந்தவொரு பாதையில் இட்டுச் செல்கிறீர்கள் என்பதை உங்கள் பிரேதப் பெட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. இவை நிச்சயமாகப் புதைகுழியை நோக்கியே செல்லும்.

வடக்கில் இறந்த இராணுவத்தினரின் - வெறுங்கை அல்லது காலை மட்டும் ஒரு பெட்டியில் வைத்து, அதனை மூடிச் சீல் வைத்துவிட்டு, அதனைத் தென்பகுதில் இருக்கும் பெற்றோரிடம் கொடுத்ததை மறந்துவிட்டீர்களா? அந்த பிரேதப் பெட்டியை ஒரு தடவை நினைத்துப் பாருங்கள்.

கை, கால்கள் மட்டும் இருந்தாலாவது பரவாயில்லை, அதுவுமில்லாது வெறும் மரத்துண்டுகளை உள்ளே வைத்துவிட்டு அவற்றைச் சீல்வைத்து, பிரேதப்பெட்டிகளை உறவினர்களிடம் கொடுத்திருந்தீர்கள். தங்கள் உறவுகளை வெறும் பெட்டியில் வைத்து, மரக்குற்றிகளுக்கு இறுதிக்கிரியை நடத்திய இராணுவத்தினரின் உறவினர்களை நினைத்துப் பாருங்கள். இதில் சில இராணுவத்தினர் பின்னர் உயிருடன் திரும்பிவந்த கூத்துக்களும் நடந்துள்ளன.

இதைவிடக் கவலைக்குரியது - இறந்த பல இராணுவத்தினரை, அவர்களின் சடலங்களை ஜனாதிபதி சந்திரிகா- புலிகளிடமிருந்து வாங்க மறுத்ததும், அவர்களை இன்னமும் உயிருடன் இருப்பதாகக்கூறி, அவர்களை காணாமற்போன படையினரின் கணக்கில் சேர்த்து, அவர்களின் வெறும் பிரேதப் பெட்டிகளைக்கூட அவர்களின் உறவினர்கள் காணக்கிடைக்காமல் செய்ததையும் நினைத்துப் பாருங்கள்.

கடந்த இருபது வருட சரித்திரத்தில் இலங்கையில் - வியாபாரத்தில் இலாபம் ஈட்டியவர்கள் என்றால், இராணுவத்துக்குப் பொருட்களை விநியோகம் செய்தவர்கள் மற்றும் பிரேதப் பெட்டிகளை விநியோகம் செய்தவர்களே என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இவற்றை விடுங்கள் -

எத்தனை தமிழர்கள் உங்கள் படைகளால் கொல்லப்பட்டுப் பிரேதப் பெட்டிகளின்றி, ஆங்காங்கே அநாதைப் பிணங்களாக வெறும் டயர் போட்டு எரிக்கப்பட்டனர் தெரியுமா?

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் குண்டடிபட்டு, இறந்ததம் உறவுகளை விட்டது, விட்டபடி வீட்டுக்குள் விட்டுவிட்டு ஓடியது அறிவீர்களா? இறந்த தங்கள் உறவுகளுடன் தங்கள் நினைவுகளையும், ஆன்மாவையும் வீட்டுக்குள் விட்டுவிட்டு வெறும் உடலை மட்டும் சுமந்தபடி அவர்கள் இடம்பெயர்ந்ததை அறிவீர்களா?

இடம்பெயர்ந்த இடத்தில்கூட இறந்தவர்களைப் புதைக்க ஒரு பிரேதப் பெட்டி கிடைக்காமல், வெறும் பக்கீஸ் பெட்டிப் பலகையில் போட்டு, மூடித் தாட்டுப்போட்டுப் போனதை அறிவீர்களா?

உங்கள் இராணுவத்தினரின் சடலங்களை அல்லது வெறும்



இன்றைய ஜே.வி.பியின் மும்மூர்த்திகள் - விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா, நந்தன குணதிலக

பெட்டிகளை ஒன்றில் நீங்கள் புதைத்தீர்கள், அல்லது விடுதலைப் புலிகள் மரியாதையாகப் புதைத்தார்கள். அந்த இடங்களை இன்றும் நீங்கள் சென்று பார்க்கக் கூடியதாக இருக்கின்றது, அஞ்சலி செலுத்தக் கூடியதாக இருக்கின்றது. சந்திரிகாவால் வாங்க மறுக்கப்பட்டு, புலிகளால் புதைக் கப்பட்ட இராணுவத்தினருக்கு தென்பகுதியிலிருந்துவரும் சிங்களவர்கள்- வன்னியில் அஞ்சலி செலுத்துகின்றனர். ஆனால், எத்தனை தமிழர்கள் தங்கள் உறவுகள், மனைவி, கணவன், மகன், மகள் ஓடிவருகையில், எங்கே சுடுபட்டு வீழ்ந்தனர். வீடு பார்க்கப்போன இடத்தில் எங்கே இறந்தனர், எங்கே கிடந்து மண்ணோடு மண்ணானார்கள் என்று தெரியாமல், பொதுவான ஒரு இடத்தில் அஞ்சலி செலுத்துகின்றனர்.

இன்னும் சிலர் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு விசாரணையும் இல்லை. எங்கே என்ற விலாசமுமில்லை. அவர்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்வதா, விடுவதா என்றே புரியாமல் இன்னும் சில உறவுகள்.

உங்கள் பிரதேப் பெட்டி நாடகம் இவற்றைத்தான் எமக்கு நினைவூட்டுகின்றது.

ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய உங்கள் இருவராலும் இணைந்து நடத்தப்படவுள்ள அரசாங்கத்தில், நாட்டின் நிலைமை எங்கே செல்லும் என்பதை உங்கள் பிரேதப் பெட்டி நாடகம் எச்சரிக்கின்றது.

புதைகுழியை நோக்கியே இலங்கை செல்லும் என்பது தமிழ்மக்களுக்குப் புரிகிறது. பாவம் சிங்களவர்கள் - ஒன்று செய்யுங்கள். ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி - நீங்கள் இருவரும் இணைந்து நடத்தவுள்ள புதிய கூட்டு முன்னணிக் கட்சிக்கு ஒரு பொதுச் சின்னம் வைக்கப்பட வேண்டும் என்று கலந்துரையாடி வருகின்றீர்கள். ஏன் இந்த பிரேதப் பெட்டியையே, அந்தப் புதிய கூட்டுக்கட்சியின் சின்னமாக வைக்கக்கூடாது. அப்போதாவது சிங்களவர்கள் புரிந்துகொள்ளக்கூடும்.

**வாசகன் இரட்ணதுரை**

## தகவல் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய சான்றிதழுக்கான கற்கைநெறி

### விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடாத்தப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்க் கற்கைநெறி, கிளிநொச்சி மாவட்டத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.இந்தப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவராகவும், 16 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்ட, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் - கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன், ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருக்கவேண்டும். மேலதிக விபரங்களை அறிய -கிளிநொச்சி கச்சேரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(122)

**வலி.தென்மேற்கு பிரதேசசபை அலுவலகத்துக்கு**

## புதிய காணி கொள்வனவு; விளக்கம் கோரிக் கடிதம்!

மாதகல் பிரதேசசபை உப அலுவலகத்துக்கென நிரந்தரக் காணி உள்ளபோதும், பெரியவிளான் பகுதியில் புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டது பற்றிய விளக்கத்தைத் தருமாறு சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராஜா - வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் செயலரைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டுவரை மாதகல் பிரதான வீதியில், பிரதேசசபை உப அலுவலகம் இயங்கிவந்தது. 1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் அக்கட்டடம் முற்றாக அழிவடைந்தது. தற்போது பழைய கட்டடம் இருந்த காணியில், மாதகல் பிரதேசசபை உப அலுவலகம் அமைக்கப்படாமல், அதற்கெனப் பெரியவிளானில் புதிதாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து, யாழ். அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியிருப்பதாலேயே, இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து விளக்கம் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43)

# குற்றச்செயல்கள் அதிகரிக்கும் நாடு; மரபுகள் மீறப்படும் நாடாளுமன்றம்!

நாட்டில் குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. குற்றம் இழைத்தோர் தண்டிக்கப்படுவதும், பின்னர் அவர்கள் மீண்டும் குற்றம் செய்வதும் சாதாரண நிகழ்வாகிவிட்டது. அதிலும்- அரசியலில் இது சர்வசாதாரண மான விடயமாகிவிட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்தபோதும், அதன்பின்



அரசுக்கெதிரான ஜே.வி.பியின் பேரணி

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தபோதும், அரசியல் குற்றச்செயல்கள் - அதிகாரங்களைப் பயன்படுத்தி, சில அமைச்சர்களாலும், அரசியற் கட்சிகளின் பிராந்திய உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள்ளப்படுகின்றன. பொலிஸ் - நிர்வாகங்களில் தலையிடுவதே இதில் பிரதான குற்றமாகும். தமக்கு ஆதரவான ஒருவர் எவ்விதக் குற்றங்களைச் செய்தாலும், அவரைக் காப்பாற்றிக்கொள்ளும் செயல்களில் அரசியல்வாதிகள் ஈடுபடுகின்றனர். முன்னர் அமைச்சர்களின் மத்தியிலிருந்த இந்த அதிகாரத் துஷ்பிரயோகம், தற்சமயம் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் வரையும் பரவியிருக்கின்றது.

பொலிஸ் திணைக்களம் - சுயாதீன ஆணைக் குழுவின்கீழ் கொண்டுவரப்பட்டாலும்கூட, அரசியல்வாதிகளின் இந்த அதிகாரத் துஷ்பிரயோகங்களில் மாற்றங்கள் ஏற்படவில்லை. அண்மையில் ஆளும் கட்சியின் அரசியல்வாதி ஒருவர் இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றுக்கு உள்ளானார். பொலிஸாரிடம் தமது ஆதரவாளரை விடுவிக்கக்கோரி, இவர் பலாத்காரத்தைப் பிரயோகித்தார் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. இதனை ஊடகங்கள் வெளிப்படுத்தியபோதும், குறிப்பிட்ட அரசியல்வாதியினால் குற்றச்சாட்டுக்கு மறுப்பு வெளியிடப்பட்டு, தாம் ஒருபோதும் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கவில்லையென மறுப்புத் தெரிவித்தார்.

இன்றைய அரசியல்வாதிகளிடம் இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன. ஒன்று - குற்றச் செயல்களை மேற்கொள்வதும், அதனை மறுதலிப்பதும். இரண்டாவது செயல் - ஊடகங்களுக்கு அறிக்கைகளை அனுப்புதல். இந்த ஊடகங்களுக்கு அறிக்கை அனுப்பும் கலாசாரம் இப்போது நடைமுறைக்கு வந்த விடயமல்ல. முன்னர் இருந்தே கடைப்பிடிக்கப்பட்டுவந்த விடயம். ஆனால், தற்சமயம் அது புதுவடிவம் பெற்றுள்ளது.

அரசியல்வாதிகள் - மக்கள் சேவைகளில் ஈடுபடுகிறார்களோ? இல்லையோ? அவர்களின் பெயர்கள் ஊடகங்களில் வெளிப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். இது, அவர்களின் நடைமுறை மற்றும் எதிர்கால அரசியலுக்கு நன்மை பயக்கும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டில் ஏதாவது விடயம் இடம் பெற்றுவிட்டால், அரசியல்வாதிகள் சுறுசுறுப்பாகி விடுகின்றனர். உடனடியாகத் தமது ஊடக அறிக்கைகளைத் தயாரித்து விடுகின்றனர். குறிப்பிட்ட விடயத்தில் தாம் கவனம் எடுப்பதாகவும், இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடக்கக்கூடாதெனவும், நடந்த சம்பவத்துக்குக் கவலை தெரிவிப்பதாகவும் மட்டுமே அவர்களின் அறிக்கையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கும். பிரயோசனமான விடயங்கள் எதுவும் அதில் இடம்பெற்றிருக்காது. அரசியல்வாதிகளின் அறிக்கைகளில் பிரதான நோக்கம் ஒன்று இருக்கிறது. அதுதான் மக்கள் மத்தியில் தம்மை நினைவுபடுத்திக் கொள்ள வைக்கும் செயல்களாகும். அதற்கு இந்த அதிகாரிகள் துணைபுரிகின்றனர். மேலும் சில அரசியல்வாதிகள், தமக்கான ஊடகப் பிரதிநிதிகளை நியமித்து, அவர்கள் மூலமாக நாளாந்தச் செய்திகளை ஊடகங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் - அரசியல்வாதிகள் குற்றஞ்செய்வதும், பின்னர் அது மறக்கப்படுவதும் சாதாரண விடயங்களாக மாறிவிட்டது. இந்த நிலையில் ஜனாதிபதியைத் தவிர ஏனைய அரசியல்வாதிகளுக்கு, சட்டத்தளர்வுகளுக்கு இடமில்லை. அவர்கள் ஏனைய மக்களைப் போலவே, சட்டத்துக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக உள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகள் என்ற நிலையிலுள்ளவர்கள், மக்களின் சார்பில் ஆஜராகவேணடிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். வெளியில் இவ்வாறான செயற்பாடுகளை - அரசியல்வாதிகள் - குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடும் அதேநேரம், இன்று அது நாடாளுமன்றம்வரை வியாபித்திருக்கிறது.

ஒவ்வொரு வாரமும் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும்போது, அமர்வுகள் - உறுப்பினர்களின் செயல்களால் ஒத்திவைக்கப்படுகின்றன. சபையில் - சபாநாயகர் பணியாற்றுகின்றபோதும், அவரின் கட்டளைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்றுவதில்லை. கடந்த வாரத்தில் மாத்திரம் நாடாளுமன்றம் கூடிய மூன்று நாட்களில், மூன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்த முடியாதநிலையிலேயே, இந்த அமர்வு ஒத்திவைப்புகள் இடம்பெற்றன. கடந்த அமர்வுகளின் போது, நாடாளுமன்றத்துக்குள் பிரேதப்பெட்டி கொண்டு வரப்பட்ட நாள் முதல், தொடர்ந்தும் ஒவ்வொரு அமர்வுகளிலும் பிரச்சினைகள் உருவாகிவருகின்றன.

தமக்குப் பாதுகாப்பில்லை எனக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - இன்று நாடாளுமன்றததுக்குள் பாதுகாப்பற்ற தன்மையை உருவாக்கி வருகின்றனர். இதற்கு ஒரு உதாரணமே - கடந்தவாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட வைப்பகங்கள் (Lockers)

## தெற்குத் திசையினிலே......

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

சோதனையிடப்பட்டமையாகும். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும், Lockers எனப்படும் வைப்புப்பெட்டிகளுக்கான திறப்புகளில் ஒன்று, நாடாளுமன்றப் பொலிஸாரிடம் இருக்கும். ஆனால், இந்தச் சோதனை நடவடிக்கை நிகழ்ந்த அன்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் 6 உறுப்பினர்கள் தமது திறப்புகளுடன் நாடாளுமன்றப் பொலிஸாரிடம் இருக்கும் திறப்புகளையும் எடுத்துச் சென்றிருந்தனர்..

நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாகக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே Lockers சோதனையிடப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த நடைமுறையும் மீறப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேரும் தமது திறப்புகளைத் தரமறுத்தமை ஜனநாயக மரபுக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயல் என்றே வர்ணிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி மாத்திரமே இவ்வாறான ஜனநாயக மறுப்பு, அதாவது - நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு எதிராக நடந்து கொள்கிறது என்பது உண்மையல்ல. ஏற்கனவே ஜனாதிபதியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்தபோது, எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், இவ்வாறான ஜனநாயகத்துக்கு எதிரான கேலிக்கூத்துக்களில் ஈடுபட்டு வந்தது.

2000 ஆம் ஆண்டு அரசியலமைப்பை மாற்றி, இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காண வேண்டும் என்ற அடிப்படையில் - ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை, ஐக்கிய தேசியக் கட்சியினால் நாடாளுமன்றத்துக்குள்ளேயே வைத்து எரியூட்டப்பட்டது. முன்னர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சியிலிருந்தபோதே, நாடாளுமன்றத்துக்குள் குண்டுவீச்சு நடத்தப்பட்ட பின்னர், வெளியாரால் இதுவரை நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவில்லை. நாடாளுமன்றத்தின் பாதுகாப்பின்மை, இன்று இங்கிருக்கும் உறுப்பினர்களாலேயே ஏற்பட்டிருக்கிறது.

எனவே, நாட்டின் ஜனநாயகத்துக்கு முன்மாதிரியாகச் செயற்படவேண்டிய நாடாளுமன்றம், இன்று ஜனநாயக மரபுகளை மீறிச்செயற்படும் நிலைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

வன்முறைகளைக் களைவதற்காகவே, ஜனநாயக மரபு முறைகள் பேணப்படுவதாகக் கூறப்படும் இந்தவேளையில், அந்த ஜனநாயக மரபுகளைக் கொண்டிருக்கவேண்டிய நாடாளுமன்றத்தில், வன்முறைகள் இடம்பெறுவது எந்தளவு நியாயம்?

அரசியற்கட்சிகள் மத்தியில் ஜனநாயகம் இருக்கவேண்டும் என்பதை உணர்த்தும் முகமாக, அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சி முன்னுதாரண நடவடிக்கையை மேற்கொணடது. ஆனால், அது கட்சியின் இடைநிலை உறுப்பினர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டமையால், மக்கள் மத்தியில் கட்சியின் ஜனநாயகக் காப்புத் தன்மையைப் பெரிதாகக் காட்டவில்லை. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் - கட்சியின் ஒழுக்கங்களுக்கு மாறாகச் செயற்பட்டபோதும், அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை குறித்து மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க - பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து அமைக்கவிருக்கும் கூட்டணிக்கு என்ன நடந்துள்ளது எனப் பார்ப்போம். இரண்டு கட்சிகளும் தமக்கிடையே பல இணக்கங்களை எட்டியுள்ளபோதும், முக்கியமாகத் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் எதுவித இணக்கப்பாடும் ஏற்படவில்லை. அதேநேரம், இரண்டு கட்சிகளும் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகும் வகையில் பல இணக்கங்களை எட்டியுள்ளன. இந்த நிலையில் இரண்டு கட்சிகளுக்கு இடையிலும் - பிரதான பதவிகள் தொடர்பாகப் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தற்போதுள்ள நிலைமைப்படி - பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்படுத்தப்போகும் கூட்டணியின் தவிசாளர் பதவி, மக்கள் விடுதலை முன்னணிக்குச் செல்கிறது. தலைவர் மற்றும் பொதுச் செயலர் பதவிகள் - பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் செல்கின்றது.

அண்மையில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி - ரோக்கியோ மாநாடு தொடர்பாக பலத்த சந்தேகங்களை வெளியிட்டுள்ளார். ரோக்கியோ மாநாட்டினால், தென்னிலங்கை மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படவில்லை என, அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா - ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். நாட்டில்



சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரி தாப்ரு

குற்றச்செயலகள் அதிகரித்து வருகின்றன. இதனைத் தடுக்கும் முகமாக, உள்துறை அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேறக வேண்டும் அல்லது மேலதிகமாக அந்த அமைச்சுக்கு மற்றும் ஒருவரை நியமிக்க ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த புதன்கிழமை வழமையாக அமைச்சரவை கூடியவேளையில், ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் ஒன்று பிரதம மந்திரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தின் பரிந்துரைகளை அனுப்புவதற்கு முன்னர், அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாகும்.

தம்மிடம் இந்தப் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படாது எனத் தெரிந்துகொண்டதன் அடிப்படையிலேயே - ஜனாதிபதி அதனை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

. இந்த நிலையில் இலங்கையின் அரசியல் போக்கு, இந்தவாரம் மீண்டும் ஒரு எதிர்பாப்பை ஏற்படுத்தியிருக்கிறது. செயலுருவம் இல்லாவிட்டாலும்கூட, முழுமைபெறாத வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகப் பரிந்துரைகள். அரசாங்கத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்ற எதிர்பார்ப்பே அதுவாகும்.

இந்தவாரத்தில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தலாம் என, எதிர்பார்க்கப்பட்ட அரசாங்கத்துக்கும் அதன் பலம் பொருந்திய அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கவுக்கும் இடையிலான முறுகல் முடிந்தளவு தீர்க்கப்பட்டு விட்டதாகவே தெரிகிறது.

# சீன ஹுவாய் ஆறு பெருக்கெடுத்தது!

## 600 பேர் பலி, பல வீடுகள் அழிவு



(பீகிங்)

சீனாவின் மூன்றாவது நீண்ட ஆறான ஹுவாய் ஆறு, பெருக்கெடுத்துள்ளதையடுத்து, கிழக்கு சீனாவின் தாழ்வான பகுதிகளிலிருந்து, லட்சக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

பெருக்கெடுக்கும் ஆற்றின் ஓட்டத்தை, வேறுபகுதிக்கு திசைதிருப்பும் பாரிய முயற்சியில், பெருமளவு சீன இராணுவத்தினரும் பொதுமக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில், முதற்தடவையாக தற்போது ஹுவாய் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. சுமார் 600 பொதுமக்கள் ஆற்றுநீரில் மூழ்கி இறந்துள்ளனர். லட்சக்கணக்கில் வீடுகள் அழிந்துள்ளன.

## லைபீரியப் போராளிகள் எச்சரிக்கை


சார்ள்ஸ் ரெயிலர்

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் பதவிவிலக முன்னர் - அங்குவரும் எந்த அமைதிப்படை அணி மீதும் தாக்குதல் நடத்துவோம் என, லைபீரியாவின் பிரதான போராளிக்குழு எச்சரித்துள்ளது.

சர்வதேச அமைதிப்படையின் பிரசன்னம், ஜனாதிபதியின் ஆட்சியைப் பலப்படுத்தவே செய்யும் என, 'லேர்ட' என்னும் லைபீரியாவின் பிரதான கிளர்ச்சிக்குழு தெரிவித்துள்ளது.

# மக்கள் விரும்பினால் பதவிதுறக்கத் தயாராம்!

## ஈரானிய ஜனாதிபதி கதாமி அறிவிப்பு

மக்கள் விரும்பினால், தான் பதவிதுறக்கத் தயாரென, ஈரானிய ஜனாதிபதி முஹமட் கதாமி தெரிவித்துள்ளார். ஈரானிய அரச செய்தித்தாள் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், நாம் மக்களின் எஜமான்கள் அல்லர், இந்நாட்டின் சேவகர்கள். மக்கள் எம்மை வேண்டாம் எனக் கூறினால், நாம் போய்விடுவோம் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கதாமி, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டுக்கள், ஈரானியர்களிடையே பரவலாக எழுந்துவரும் தற்போதைய நிலையில், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உலகவலம்

# சி.ஐ.ஏ. பணியாளர்கள் மீது நம்பிக்கை இருக்கிறதாம்!

## ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

(வொஷிங்ரன்)

ஈராக் - அணுவாயுத உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தை, ஆபிரிக்க நாடு ஒன்றிலிருந்து பெற்றதாக, அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. தவறான தகவலை வெளியிட்டமையை, அவ்வமைப்பின் தலைவர் ஜோர்ஜ் ரெனாட் ஏற்றுக்கொண்டபோதிலும், அவருக்குத் தனது ஆதரவை அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

சி.ஐ.ஏயின் தவறான தகவலை அடிப்படையாக வைத்தே, ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்ததாக தற்போது குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் - ஆபிரிக்க நாடுகளுக்குச் சுற்றுப்பயணமாகச் சென்றுள்ள புஷ், நைஜீரியாவில் வைபவம் ஒன்றில் பேசுகையில், 'எனக்கு சி.ஐ.ஏயில் பணிபுரியும் அனைவரிலும் நம்பிக்கையுண்டு. அதன் தலைவர் ரெனாட்டிலும் நம்பிக்கையுண்டு. அவர்களுடன் பணியாற்ற நான் விரும்புகிறேன்' எனக் குறிப்பிட்டார்.


சி.ஐ.ஏ. தலைவர் ரெனாட்


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் மதிக்காந்த்

திரு. திருமதி விஜயகாந் - உஷா தம்பதிகளின் புத்திரன் மதிக்காந் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.07.2003) தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா விஜயகாந், அம்மா உஷா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்

ஸ்ரீ முருகபவனம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(416)

தகவல்:
விஜயகாந் (தந்தை)



இன்று! இன்று!! இன்று!!

யாழ் மண்ணில் பிரமாண்டமான மேடையலங்காரங்களுடன் முதன் முதலாக
தொலைக்காட்சிக்காக நடாத்தப்படும் அதி உன்னத குழந்தைகள் நிகழ்ச்சியை
நேரில் உங்கள் கண்களுக்காக தயாரித்து வழங்குகின்றோம்.
உலகெங்கும் டிஜிற்றல் தொலைக்காட்சி அலைகளில் பரவவிருக்கும்
இச் சிறுவர் நிகழ்ச்சியை நீங்களும் நேரில் பார்த்து இரசிக்க விரும்புகிறீர்களா.....?
வாருங்கள்




குட்டி மேதைகள்

இடம் : வேம்படி மகளிர் கல்லூரி
காலம் : இன்று மதியம் 2.00 மணி

நம் தேசத்து குட்டி மேதைகளை தரணியெங்கும்
ஒளியலைகளில் பரவவிடும் தொலைக்காட்சி நிகழ்ச்சி

நிகழ்ச்சித் தயாரிப்புக்குழு :- DMN, 23, கோவில் வீதி, நல்லூர்.

நிகழ்ச்சி ஆதரவு

Annai Nagaa Food City
For all your daily needs

THAMPI
Now Links With
LLIONAIR
Lanka's pride in the sky

நாடெங்கும் மேசைத் தொலைபேசி விநியோகஸ்தர்
பவர் செலூலர் ரேடிங் கம்பனி

ஊடக அனுசரணை:
நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் நிறைவு.... எங்கள் சேவை.
மோட்டார் சைக்கிள்களைச் சிறப்பாகச் சேவிஸ் செய்து கொள்ள நாடுங்கள்

**இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்**
32 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
வணிக விடுமுறை நாள்கள் தவிர்ந்த எல்லா நாள்களிலும் (ஞாயிறு உட்பட) சேவிஸ் செய்து கொள்ளலாம். (சி-1170)

## வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள
# பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் மிதிவெடி விழிப்புணர்வுப் பாடம்!

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில், 2004 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான பாடம் உள்ளடக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தரம் 6 இற்கு மேற்பட்ட வகுப்புக்களில், சமூகக்கல்விப் பாடத்திட்டத்திலேயே, மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான பாடம் உள்ளடக்கப்படவுள்ளதாக, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.

வட - கிழக்குப் பகுதியின் பெருமபாலான பிரதேசங்களில் மிதிவெடி அபாயம் எதிர்நோக்கப்படுவதால், இது தொடர்பான விழிப்புணர்வை, மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவன உதவியுடன், ஆசிரியர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வுப் பாடம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்றுகாலை 8.30 மணிக்கு நடைபெறும். கால் இறுதியாட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழகமும், பி.ப. ஒருமணிக்கு யங்ஸ் ராரஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

### தேடுதலுக்குச் சென்ற படையினரை புலிகள் தடுப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் -வாழைச்சேனைப் பகுதியில் தேடுதல் நடத்தச சென்ற படையினரைப் புலிகள் தடுத்து நிறுத்தினர்.

நேற்று இப்பகுதியில் தேடுதல் நடத்தச்சென்ற படையினரிடம்- இவ்வாறு தேடுதல் நடத்துவது புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு முரணானது எனப் புலிகள் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து அவர்கள் திருப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

## நாடாளுமன்றத்துக்குள் பிஸ்ரல்; எடுத்துவந்த மெய்க்காவலர் கைது!

நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்குள் அனுமதியின்றி பிஸ்ரல் ஒன்றை எடுத்துச்சென்ற, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவரிடமிருந்த பிஸ்ரலும் கைப்பற்றப்பட்டது.

கைதான மெய்ப்பாதுகாவலரிடமிருந்து மீட்கப்பட்ட பிஸ்ரல், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்குரியதல்ல என்றும், இன்னொரு பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருக்கே அது சொந்தமானது என்றும் தெரியவருகிறது. நாடாளுமன்றத்தின் மிக உயர் பாதுகாப்புப் பகுதிக்குள் இந்த பிஸ்ரல் கொண்டுவரப்பட்டது பற்றி, நாடாளுமன்றப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட உயர்பாதுகாப்புப் பிரிவினுள் எத்தகைய ஆயுதங்களையும் எவரும் எடுத்துவரக்கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கும்போது, எவ்வாறு இந்த பிஸ்ரல் கொண்டுவரப்பட்டது என்பது பற்றி, பொலிஸார் தரப்பில் வியப்புத் தெரிவிக்கப்பட்டது.

# நிதி கண்காணிப்பு குழுவினர் அடுத்தமாதம் கொழும்பிற்கு!

ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, பயன்படுத்தப்படும் முறைகள் குறித்துக் கண்காணிக்க, சர்வதேச நாடுகள் அங்கம் வகிக்கும் கண்காணிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு அடுத்தமாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் உதவிவழங்கும் மாநாடு, ரோக்கியோவில் நடைபெற்றபோது - பெருமளவான நிதி, இலங்கைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு உரியமுறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காகவே, இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பிரித்தானியா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள், இந்த கண்காணிப்புக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, அடுத்தமாதமே விடுவிக்கப்படும் எனவும் - இந்த நிதி விடுவிக்கப்பட்டதும், இந்தக் குழு இலங்கைக்கு வருமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரோக்கியோ நிதி உதவியினை கண்காணிக்கும் இந்தக்குழுவின் வருகை தொடர்பாக - ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளின் தூதுவர்களுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.(01)

### சஞ்சீவன் நினைவாக இரத்ததானம்

இராணுவ அராஜகத்துக்கு கடந்த 2000 ஆம் ஆண்டு பலியான யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் 3 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்றுகாலை யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்ததானம் செய்ய பழைய மாணவ நண்பர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

### பயங்கரவாத...

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாக 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது.

### ஜே.வி.பியுடன்....

ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பது ஜே.வி.பி. வட்டாரங்களில் அதிர்ச்சியலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இதனிடையே - கூட்டணி அமைந்தால், அதன் தேசிய அமைப்பாளராக - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் பொதுச்செயலர் பதவியை -ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவரும் ஏற்கலாம் எனக் கூறப்படுகின்றது.

### மக்கள்...

எனவும் கூறினார்.

இதேவேளை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசு - தமிழ்மக்கள் விரும்பாத கட்சிகளுடன் பேசி எந்தப் பயனும் கிடையாது எனவும் தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை - கூட்டணியில் தோன்றியுள்ள பிரச்சினை, உட்கட்சி விவகாரம். ஆனந்தசங்கரி விடயத்தில் மக்கள்தான் முடிவெடுப்பார்கள். அவர்களின் உட்கட்சி விவகாரங்களில் புலிகள் தலையிடமாட்டார்கள் எனவும், தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (09)

### இஸ்ரேல்....

இந்தச் சந்திப்பின்போது படையினரிடம் தற்போது இல்லாத நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்தும் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

### ரெலவ்சன்....

தங்கியிருக்கும் ரெலவ்சன் - புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் முக்கிய தளபதிகளுடன் நீண்டபேச்சுக்களை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுக்களின்போது, கடல்மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பான திட்டவரைபொன்றை, ரெலவ்சன் புலிகளிடம் கையளிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## 'செவ்வரளிப் பூக்கள்' நூல் நேற்று வெளியிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

'புலிகளின் குரல்' நிறுவனத்தினரின், வெளியீட்டுப் பிரிவினரின் ஏற்பாட்டில் - ந.கிருஷ்ணசிங்கத்தின் 'செவ்வரளிப் பூக்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா, நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

நேற்றுமாலை 3.30 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - ஈகச் சுடரினை 'புலிகளின் குரல்' நிறுவனத்தின் துணைப் பொறுப்பாளர் செயல் வீரன், தமிழீழ கலை பண்பாட்டுக் ககத்தின் துணைப் பொறுப்பாளர் வளநாடன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை - தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, ஈழப்போராட்டத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த - மாவீரர்களுக்கும், பொது மக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

'புலிகளின் குரல்' நிறுவனத்தின் பிரதம ஆசிரியர் தவபாலனின் தலைமையுரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், வரவேற்புரையை 'புலிகளின் குரல்' நிறுவன அறிவிப்பாளர் பொன்.காந்தன் நிகழ்த்தினார்.

இந்த நூலின் வெளியிட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். சிறப்புரையை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ் நிகழ்த்தினார்.

'செவ்வரளிப் பூக்கள்' சிறுகதைத் தொகுதியின் முதற்பிரதியை துணைவேந்தர் மோகனதாஸ் வெளியிட்டுவைக்க, கவிஞர் புதுவை இரத்தினதுரை பெற்றுக்கொண்டார்.

இந்நூலின் மதிப்பீட்டுரையினை 'வெளிச்சம்' சஞ்சிகையின் ஆசிரியர் சி.கருணாகரன் நிகழ்த்தினார்.

## எம்.பிக்கள் மீதும் இனிமேல் உடற்சோதனை நடத்தப்படும்!

### பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

நாடாளுமன்றத்துக்குள் நுழையும் ஒவ்வொரு எம்.பிக்களையும், பாரபட்சமின்றி உடற்பரிசோதனை செய்யுமாறு, பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா பணித்துள்ளார்.

நாடாளுமன்ற பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கோரியதையடுத்தே, பொலிஸ் மா அதிபர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

எம்.பிக்களின் மிரட்டல்களுக்குப் பொலிஸார் அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொலிஸாரின் இடமாற்றங்களுக்கும், எம்.பிக்களுக்கும் இனி தொடர்பில்லை. சுதந்திர பொலிஸ் குழுவே பொலிஸாரின் இடமாற்றத்தை இனிக் கையாளும். எம்.பிக்கள் அல்லர் எனவும் பொலிஸ் மா அதிபர், தமது அறிவிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அழகிய கூந்தலின் ரகசியம்


(சி-1142)
பக்க விளைவு அற்றது
பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.
பயோட்டினெக்ஸ் -E
எது உங்கள் பிரச்சினை
- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

?

பயோட்டினுடன் விட்டமின் - E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்
இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட
பாவனை முறை: தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்.
BIOTINEX -E
இயற்கையான பயோட்டினெக்ஸ் -E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.
யாழ். முகவர்: ஜெகன் பார்மசி — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2223191
வன்னி முகவர்: அகிலன்ஸ் பார்மசி — பிள்ளையார் மருந்தகம், கிளிநொச்சி.
மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Marketed By: Arkem Colombo
Tel: 470290, 075-344436, E mail - arkem@sltnet.lk

இரவுக் கடமை உத்தியோகத்தர் தேவை
யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் 40 வயதிற்குட்பட்ட க.பொ.த உயர்தர சித்திபெற்ற சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் (பத்திரிகைத்துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது) சகல ஆவணங்களுடன் 14.07.2003 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.
நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.